Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MARCH 26, 2021

சனிக்கிழமை மார்ச் 26, 2022 | ஒளி: 07 கதிர்: 266 | பக்கம்:10 | நகரப்பதிப்பு★ | Free

## தங்கம் எகிறியது



இலங்கையின் தங்க வர்த்தக சந்தையில், 22 கெரட் ஒரு பவுண் தங்கம், நேற்று (25) பிற்பகல் வேளையில், 155,000 ரூபாய் வரையிலும் அதிகரித்தது.

கொழும்பு, செட்டியார் தெரு, தங்க வர்த்தகர்களின் கூற்றின் பிரகாரம், இன்றைய நாளில் (நேற்று) ஒரு பவுண் 24 கெரட் தங்கத்தின் விலை 167,000 ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது என்றனர்.

தொடர்ச்சி P2



அத்தியாவசிய பொருட்கள்:

## தட்டுப்பாடின்றி வழங்க உத்தரவிடுக

**சட்டவாட்சி, மக்களின் அமைதிக்கு அச்சுறுத்தலாகும் எனச் சுட்டிக்காட்டு**

அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மற்றும் சேவைகளின் விலைகள் ஏற்றுக்கொள்ள முடியாதளவுக்கு அதிகரித்துள்ளன. இதனால் மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை சட்டத்தரணி சங்கத்தால், இவ்விரு மனுக்களும் உயர் நீதிமன்றத்தில் நேற்று (25) தாக்கல் செய்யப்பட்டன.

தொடர்ச்சி P2



# “நான்கும் முக்கியம் 13 மிக முக்கியம்”

## ஜனாதிபதியிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

**13யை முழுமையாக அமல்படுத்தாவிடின் நாங்கள் ஏன்? பேசவேண்டும்?**

**புலம்பெயர்ந்தோர் நிதியை கொண்டுவர முன்னர் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்**

**ஒரு இலட்சம் ரூபா நிதி, முழுமையான நட்டஈடு அல்ல; ஒரு நிவாரண தொகையாகும்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பு, மூன்று முறைகள் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (25) நடைபெற்றது. இதில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழு பங்கேற்றிருந்தது. மறுபுறத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தலைமையிலான குழு பங்கேற்றிருந்தது.

நேற்றுக்காலை 10.30க்கு ஆரம்பமான சந்திப்பு, சுமார் 3 மணிநேரம் நீடித்தது. ஜனாதிபதியுடனான முதலாவது சந்திப்பு என்பதால், இருதரப்பினரும் மனம் விட்டு, கலந்துரையாடியுள்ளனர். எனினும், சம்பந்தன் அவ்வப்போது ஆவேசப்பட்டுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேபோல, அரசாங்கத் தரப்பில் இருந்து பல விடயங்களுக்கு உறுதியான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.

இந்தச் சந்திப்பின் போது, ‘அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம்’, ‘அரசியல் தீர்வு’, ‘காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்’, ‘வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு’ உள்ளிட்ட நான்கு விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்த இரா. சம்பந்தன், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அதி முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். 13 இல்லையெனில் பேசிப் பயனில்லையென இடித்துரைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## உள்ளே

P3 முற்றிய காதல்
P4 விநோத சுரண்டல்
P4 தட்டப்பட வேண்டிய தூசுகள்
P7 மின் பொறிக்குள் சம்பூர்
P8 பட்டால்தான் புரியும்
P9 ‘உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது



## “மோசடியான ஒப்பந்தத்தால் மின்சாரக் கட்டணம் கூடும்”

**சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு**

எரிபொருள் தொடர்பாக தென்னாபிரிக்க நிறுவனமொன்றுடன் அரசாங்கம் பாரிய மோசடி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாகவும், அந்த மோசடி ஒப்பந்தம் காரணமாக எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணம் நிச்சயமாக அதிகரிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இந்த ஊழல் ஒப்பந்தத்தின் மூலம் நடைமுறையில் உள்ள சந்தை விலையை விட அதிக விலைக்கும், நாட்டுக்குத் தேவையான அளவை விட அதிகமாக கொள்முதல் செய்யவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாவும் எதிர்க்கட்சித் தலைவர் வெளிப்படுத்தினார். சிறுவர்களை டிஜிட்டல் உலகில் தலைநிமிர்ந்து செயற்படும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்றன. டிஜிட்டல் வகுப்புக்கான நவீன கணினி தொழில்நுட்ப திரைகள் மற்றும் நவீன கணினிகளை வழங்கும் பிரபஞ்சம் திட்டத்தின் 20 ஆவது கட்டம், நேற்று (25) முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

அடுத்த வாரம் முதல்

## 10 மணிநேரம் மின்வெட்டு



பல மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் எரிபொருள் பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தி நேற்றில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவே, இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “என்னை மன்னிக்கவும்”



நீதிமன்ற அவமதிப்பு தொடர்பிலான இரண்டாவது வழக்கிலும் தாம் குற்றவாளி என ரஞ்சன் ராமநாயக்க உயர் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

தமது கருத்தின் ஊடாக அவமதிப்போ, நிந்தனையோ அல்லது இகழ்ச்சியோ இடம்பெற்றதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்திருந்தால், அது தொடர்பில் தாம் நிபந்தனையின்றி வருத்தம் தெரிவிப்பதாக, குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## 270 மெகாவோட் மின்சாரம் இழப்பு





கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், தேசிய மின்சார கட்டமைப்பில், 270 மெகாவோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் இன்மையால், மின்னுற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளரும் ஊடகப்பேச்சாளருமான அன்ரூ நவமணி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## வெளியேயா? உள்ளேயா? கொக்கரிக்கிறது சேவல்

இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா, அல்லது இல்லையா? என்பது தொடர்பிலான தீர்மானத்தை எட்டுவதற்காக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அவசரமாகக் கூடவுள்ளதென தகவல்கள் கசிந்துள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையில் 23 ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை காங்கிரஸ் புறக்கணித்திருந்தது. தாங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு செவிசாய்த்து, நடைமுறைப்படுத்தாமையை கண்டித்தே, புறக்கணிக்க முடிவு செய்ததாக காங்கிரஸ் வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## ஐ.தே.க சத்தியாக்கிரகத்தில் பெருமளவானோர் பங்கேற்பு

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், எரிபொருட்கள் உள்ளிட்ட சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, அரசாங்கத்தின் இயலாமை ஆகியவற்றை கண்டித்து, ஐக்கிய தேசிய கட்சியினரால், கொழும்பு ஹைட்பார்க்கில் நேற்று (25) சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## “நாங்கள் எங்கே உறங்குவது”



கொழும்பு, பாலத்துறை (தொட்டலங்க) பகுதியிலுள்ள குடியிருப்பு தொகுதியொன்றில் ஏற்பட்ட திடீர் தீயால் சுமார் 23 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் (24) இரவு 12.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு தீயணைப்பு பிரிவிற்கு சொந்தமான 2 தீயணைப்பு இயந்திரங்களை பயன்படுத்தி தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், தீ பரவியமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

தொடர்ச்சி P2

## முன்னாள் அமைச்சர் கைது



சட்டவிரோதமான முறையில் கஜமுத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க உள்ளிட்ட நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை விருந்தினர் இல்லத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் நேற்று (25) கைது செய்யப்பட்டுள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்



அத்தியாவசிய பொருட்கள்:

## தட்டுப்பாடின்றி வழங்க உத்தரவிடுக

### சட்டவாட்சி, மக்களின் அமைதிக்கு அச்சுறுத்தலாகும் என சுட்டிக்காட்டு

இதனால், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் தேவையான முறைமைகளை உடனடியாக தயாரிக்குமாறு பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு கட்டளையிடுமாறும் அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பினர்களினதும் சுயாதீன நிபுணர்களினதும் ஆலோசனைகளை உடனடியாக பெற்று எரிவாயு, எரிபொருள், மின்சாரம், பால் மா, ஔடதங்கள் மற்றும் உணவுப்பொருட்களை நியாயமான விலையில் மக்களுக்கு விநியோகிக்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறே அந்த மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையானது, சட்டவாட்சி மற்றும் பொதுமக்கள் அமைதிக்கு குந்தகமாக அமையும் என அடிப்படை உரிமை மனுக்களின் ஊடாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிலைமையை உடனடியாக சுமூகமாக்காவிடின், சட்டவாட்சி மற்றும் பொதுமக்கள் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் உப தலைவர் உள்ளிட்டவர்களின் ஊடாக இந்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எவ்வித தட்டுப்பாடுமின்றி நியாயமான முறையில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க முடியாமல் போகின்றமையானது, அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கை என மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வித தட்டுப்பாடுமின்றி நியாயமான முறையில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொடுத்து , சமத்துவம் மற்றும் நீதியை உறுதிப்படுத்த வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஜி.ஜி. அருள்பிரகாசத்தின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கே.கனகீஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இஹலஹேவா, சட்டத்தரணிகளான சுரேஷ் ஞானராஜ் மற்றும் புலஸ்தி ஹேவாமான்ன ஆகியோர் அடங்கிய சட்டத்தரணிகள் குழாம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் நேற்று (25) ஆஜராகியிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை, சட்ட மாஅதிபர், , மத்திய வங்கியின் ஆளுநர், திறைசேரியின் செயலாளர், சில அமைச்சுகளின் செயலாளர்கள், இலங்கை மின்சார சபை, பெட்ரோலிய கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்பினர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# “நான்கும் முக்கியம் 13 மிக முக்கியம்”

## ஜனாதிபதியிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

ஆனாலும், 13ஆவது திருத்தத்தில். காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டபோது, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், அலி சப்ரி, “கடந்தகால அரசாங்கங்களே அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகையால், தமக்கும் சிக்கல்கள் உள்ளனவென தெரிவிக்கையில், சம்பந்தன் சற்று ஆவேசமடைந்து மேசையில் தட்டி, 13யை முழுமையாக அமுல்படுத்தாவிடின் நாங்கள் ஏன்? பேசவேண்டுமென கேட்டுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி “13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த முடியாதென நாம் கூறவில்லை, முழுமையான அதிகாரப்பகிர்வுக்கு நாம் அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்போம்” என பதிலளித்துள்ளார்.

அத்துடன், வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான நிதியம் உருவாக்கப்பட்டு புலம்பெயர்ந்தோர் நிதியை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் நகர்வுகளை முன்னெடுக்கலாம் என ஜனாதிபதி கேட்டுள்ளார்.

நல்லது, ஆனால், அதற்கு முன்னர் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும், அதற்கு அரசியல் தீர்வு அவசியம் என சம்பந்தன் பதிலளித்துள்ளார்.

இந்நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் குறித்து எடுத்துரைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, காணாமல் ஆகப்பட்டோரின் உறவினர்களுக்கு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ள ஒரு இலட்சம். தமது மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என எடுத்துரைத்துள்ளது. அதன்போது பதிலளித்த நீதியமைச்சர் அலி சப்ரி, “ஒரு இலட்சம் ரூபாய் நிதி, முழுமையான நட்டயீடு அல்ல, ஒரு நிவாரண தொகையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் மக்களின் காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். மகாவலி எல் வலயத்தின் ஊடாக கடந்த 35 ஆண்டுகளாக காணிகள் அபகரிக்கப்படுகின்றது, , இனப்பரம்பலை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என கூட்டமைப்பு வலியுத்தியுள்ளது. காணி அபகரிப்புகள் இடம்பெறுமானால் தடுத்து நிறுத்த தான் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



## “என்னை மன்னிக்கவும்”

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ், அவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முதலாவது வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட அவருக்கு உயர்நீதிமன்றம் நான்கரை வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில், அதே குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது வழக்கு, நேற்று (25) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே, மன்னிப்புக் கோரினார். இதனையடுத்து, வழக்கின் தீர்ப்பை பிரிதொரு நாளன்று வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

## “நாங்கள் எங்கே உறங்குவது”

இந்த தீ விபத்தினால் உயிர் சேதமோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை. இந்நிலையில், தங்களில் வாழ்க்கையை எடுத்துரைத்த பாதிக்கப்பட்ட மக்கள், இன்றிரவு (நேற்று) நாங்கள், எங்கே உறங்குவது என்றும் கேட்டனர்.



## 10 மணிநேரம் மின்வெட்டு

இதற்கிடையில், தற்போதைய மின்வெட்டு ஒரு நாளைக்கு 6 மணி நேரத்திலிருந்து 10 மணி நேரமாக நீட்டிக்கப்படும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த வாரம் முதல் 10 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மின்னுற்பத்தி நிலையங்களில் எரிபொருள், நீர் மின் நிலையங்களில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மின்வெட்டு நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவித்தன.



## வெளியேயா? உள்ளேயா? கொக்கரிக்கிறது சேவல்

அத்துடன், தன்னுடைய கட்சிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியொன்றை வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், அரசாங்கத்தின் பிரதானிகளிடம் கோரியிருந்துள்ளார்.

தான், பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் இருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழக்கப்பட்டுள்ளன நிலையில், அரசாங்கத்தின் வெற்றிக்காக பெரும் பங்காற்றிய தங்களுடைய கட்சிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி வழங்கவில்லையென ஜீவன் தொண்டமான், அந்த பிரதானிகளின் காதுகளுக்குப் போட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில், அரசாங்கத்துடன் தொடர்ந்து இருப்பதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவசரமாகக் கூடவுள்ளதாக அறியமுடிகின்றது.



## ஐ.தே.க சத்தியாக்கிரகத்தில் பெருமளவானோர் பங்கேற்பு

இதில், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன, செயலாளர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் அணிதிரண்டு பங்கேற்றிருந்தனர்.

கட்சியின் ஆதரவாளர்கள் பேரணியாக வந்தே, இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கேற்றனர். இதனால், கொழும்பு நகர சபை மண்டபம், அதனை சுற்றிய பிரதேசங்களில், வாகன நெரிசல் காணப்பட்டது.

கட்சியின் ஆதரவாளர்கள் மட்டுமன்றி, தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும், கீழே அமர்ந்திருந்தே சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கட்சியின் நிறமான பச்சை நிறத்தில் சிலர் சேர்ட் அணிந்திருந்தனர். தலைவர் உள்ளிட்ட, பெரும்பாலானவர்கள் வெள்ளை நிற ஆடைகளையே அணிந்திருந்தனர்.

ஹைட்பார்க் மைதானம் முழுவதும் நிரம்பியிருக்கும் அளவுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: பிரதீப் பத்திரண)

## தங்கம் எகிறியது

ஐக்கிய அமெரிக்க டொலரின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றமை மற்றும் இறக்குமதிச் செய்வதற்கு போதுமானளவு ஐக்கிய அமெரிக்க டொலர், கையிருப்பில் இன்மை, ஆகியன பிரதான காரணங்களாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.




## “மோசடியான ஒப்பந்தத்தால் மின்சாரக் கட்டணம் கூடும்”

எட்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் (846,000) ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைக்கான கணினி திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை மே/மினு/கீனதெனிய மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டது. அதன்பின்னர் அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

கூடுதலான அதிகாரம் கொடுத்ததின் விளைவுகளை மக்கள் அனுபவிக்க நேரிட்டது வருந்தத்தக்கதான விடயம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மனச்சாட்சியற்ற அரசாங்கத்திடமிருந்து இதைத்தான் எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அதிகாரம் இருந்தோ அல்லது இல்லாமலோ சேவையாற்றும் பாரம்பரியத்தை ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்கு அறிமுகப்படுத்தி ஒரு புதிய கலாசாரத்தை உருவாக்கியதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்தும் தமது புண்ணிய பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நவீன உலகில் டிஜிட்டல் எதிர்காலத்திற்காக இந்நாட்டின் எதிர்கால தலைமுறையை தொழில்நுட்ப திறமையாலும், ஸ்மார்ட் கணிணி திறமையாலும், அறிவை அடிப்படையாக கொண்ட நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இணைத்து பூரணத்துவத்தை வழங்கும் நோக்குடன் எதிர்க்கட்சி தலைவரின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு டிஜிட்டல் கணிணி உபகரணங்களை வழங்கும் பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் 20 ஆவது கட்ட நிகழ்வு நேற்று (25) இடம் பெற்றது.

தேசத்தின் தந்தை என போற்றப்பட்ட சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க அவர்களின் 70 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு விசேட “பிரபஞ்சம்” நிகழ்ச்சியாக இது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 270 மெகா வோட் மின்சாரம் இழப்பு

நீர் மின் உற்பத்தியிலிருந்து 17 சதவீதமும், அனல் மின்னுற்பத்தியில் இருந்து 77 சதவீத மின்னுற்பத்தியும் தேசிய கட்டமைப்பிற்கு தற்போது இணைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# முற்றிய காதல்

மொஹொமட் ஆஸிக்

**ஒரு தறுதலையின் ஒருதலை காதலால் ஓருயிர் பறிக்கப்பட்டு, சரியாக 17 ஆவது நாளில், அதேமாதிரியான காதல் விவகாரத்தால் மூன்று உயிர்கள், அநியாயமாக பறிக்கப்பட்டு, குடும்பத் தலைவி, குற்றுயிரும் குலையுயிருமாய் கிடக்கும் சம்பவம், கண்களைக் கலங்கச் செய்துள்ளது.**



ஒரு தறுதலையின் காதல், கோடரியால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது, இதில், உயர்தரத்தில் கற்றுக்கொண்டிருந்த பதுளை, உடுவரை நேப்பியர் கீழ்ப்பிரிவைச் சேர்ந்த 18 வயதான தர்மராஜா நித்தியா எனும் மலர் கருக்கப்பட்டது. உடுநுவரவின் விளக்கும் அணைக்கப்பட்டுவிட்டது.

கண்டி கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனிக்கும்புரவத்த பிரதேசத்தில் மார்ச் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில், மூன்று உயிர்கள் ஏதோவொரு திரவத்தால் பறிக்கப்பட்டன.

இதற்கும் காதல் விவகாரம்தான் காரணம் எனச் சொல்லப்படுகின்றது. சுமார் 12 வருடங்கள் காதலித்துள்ளனர். வயதை பார்க்குமிடத்து காதல் வயப்படுத்தலுக்கு பிந்திய காதல், முற்றிய காதல், கண்களை மூடச்செய்துவிட்டது என்பதுதான் வெட்கக்கேடான விடயமாகும். இதேபோன்ற சம்பவங்கள் நாட்டில் இடம்பெறாமல் இல்லை.

களனி கங்கையிலிருந்து அண்மையில், மீட்கப்பட்ட 18 வயதான யுவதியும், காதல் விவகாரத்தால் கழுத்தறுத்துக்கொல்லப்பட்டார். அதன்பின்னரே, அவரின் சடலத்தை கங்கையில், அவரது காதலன் வீசி சென்றுள்ளார் என விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக, சிறிய குடிசைகளில் வாழ்வோர், மிகவும் நெருக்கமான அண்ணியோன்யமாகவும் இருப்பவர், ஒருவருக்கு ஒருவர் அன்பாக இருப்பர், அவ்வாறுதான், இந்தக் குடும்பமும் தகர கொட்டைகையில் தங்களுடைய வாழ்க்கைகளை கொண்டுநடத்திக்கொண்டிருக்கிறது.

காதலுக்கு கண் இல்லை என்பர், எனினும், தங்களுக்கு பிடிக்கவில்லை என்றால், விட்டுவிலகி ஒதுங்கி, தமக்கென ஒரு வாழ்க்கையை அமைத்து சந்தோஷமாக வாழவேண்டும். வாழ்ந்துகாட்டவேண்டும். பிடிக்கவில்லை என்றதும் உயிரை பலியெடுக்கும் அளவுக்குச் செல்லக்கூடாது. "எவரது உயிரையும் யாரும் பலியெடுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை"

இருவரிடையேனும் காதல் இருந்துள்ளது. இல்லையேல் காதலன் வீடுத்தேடி செல்லமுடியாது. அதேபோல், மனகசப்புகளும் இருந்துள்ளன. ஒவ்வொரு காதலிலும் ஏதோவொன்று கசக்கத்தான் செய்யும். 12 வருட காதலை, காதலி கைவிட்டுவிட்டுள்ளார். அதில் விரக்தியடைந்த காதலன், காதலியின் வீட்டுக்குச் சென்று அடிக்கடி தொந்தரவு கொடுத்துவந்துள்ளார்.

சம்பவதினமான வியாழக்கிழமை (24) காலை 7 மணியளவில், தனது காதலியின் வீட்டுக்கு சென்றிருந்த இளைஞன், திருமணம் செய்துவைக்குமாறு கேட்டுள்ளார். அதற்கு பெற்றோர் மறுத்துள்ளனர். வீட்டுக்குள்ளே வெளியிலிருந்து எவருக்கும் செல்ல முடியாத வகையில் கதவுகளை பூட்டியுள்ளார். பின்னர் ஒருவகையான திராவகத்தை வீசியுள்ளார். பெற்றோலையும் ஊற்றியுள்ளார். இதனை அவதானித்த தாய், மற்றுமொரு கதவுக்கு அருகில் சென்றுள்ளார்.

> **சந்தேகநபரான இளைஞன், நகைக்கடையொன்றில் தொழில் புரிந்து வந்துள்ளார். திருட்டு சம்பவம் தொடர்பில் 6 மாதங்களுக்கு முன்னர், சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானவர் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்**

ஒரு அடி நகர்வதற்குள்ளே வீடு தீப்பற்றி எரிந்துவிட்டது. முழுமையாக பலகைகளால் சுற்றிலும் மறைக்கப்பட்டிருந்தமையால் தீப்பிழம்பாக எரிந்துள்ளது. அக்கம் பக்கத்தினர் செல்லமுடியவில்லை. எனினும், கூக்குரல் கேட்டு, கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றவர்கள் காயமடைந்த பெண்ணைக் காப்பாற்றி, கண்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் அவர்தான் ராணி அம்மா. அவர், வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரம், காதல் விவகாரமே தீ வைக்கப்பட்டமைக்கு காரணமெனத் தெரிவித்துள்ளார். "மகளை காப்பாற்றுங்கள் மகளைக் காப்பாற்றுங்கள் உள்ளே அவள் இருக்கிறாள்" என அபாயக்குரல் எழுப்பியுள்ளார். எனினும், மூவரும் கருகிவிட்டனர்.

காதலனும், 30 வயதான ஈஸ்வரன் மேனகா (காதலி), யுவதியின் தந்தையான 71 வயதான ஈஸ்வரன் தேவன் ஆகியோர் உயிரிழந்துள்ளதுடன், 65 வயதான ராணி அம்மா என்றழைக்கப்படும் தாய், எரிகாயங்களுடன் சிகிச்சைப்பெற்று வருகின்றனார்.

சந்தேகநபரான இளைஞன், கண்டியிலுள்ள நகைக்கடையொன்றில் தொழில் புரிந்து வந்துள்ளார். திருட்டு சம்பவம் தொடர்பில் 6 மாதங்களுக்கு முன்னர், சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானவர் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எரிந்து கருகிய வீட்டுக்குள் இருந்த தகரப் பெட்டியொன்றில் 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் இருந்ததாக தெரிவித்த பொலிஸார், பல கோணங்களில் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். " வீட்டில் தீபற்றிய போது ராணி அம்மா மாத்திரமே கூக்குரலிட்டுள்ளார். அவரைத் தவிர வேறு எவரும் சத்தமிட்டவில்லை. எனவே தந்தையும் மகளையும் மயக்கமடையச் செய்த பின்னரே தீயை வைத்திருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

பல கோணங்களில் சந்தேகங்கள் வலுத்தாலும், கருகிய மூன்று உயிர்களையும், கருக்கிய காதலையும் மீண்டெழச் செய்யமுடியாது என்பது மட்டுமே உண்மை. அதனை வாழ்க்கையில் ஒரு பாடமாக கற்றுக்கொள்ளவேண்டும். இதனை காதலாக கருதமுடியாது. முற்றிய காதலாகும்.

---

## இளைஞர் குடிபெயர்வு :

# இலங்கைக்கான சவால்களும் வாய்ப்புகளும்

இலங்கையிலிருந்து புதிதாக குடிபெயர்வு தொடர்பான அலையொன்று எதனை வெளிப்படுத்துகின்றது என்பது பற்றிய மிக முக்கியமான கலந்துரையாடலொன்று (deal of discussion) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இளைஞர் மத்தியில் தங்களுடைய நாடு பற்றிய நிச்சயமற்ற தன்மை மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவின் காரணமாக எழுந்துள்ள பீதியிலிருந்து விடுபடுவதற்கு பசுமையான இடங்களை தேடுவதற்காக குடிபெயரும் இளைஞர்களின் அபிலாசைகள் பற்றி இந்தக் கலந்துரையாடல்கள் (conversations) கவனம் செலுத்துகின்றன.

இளைஞர்களின் குடிபெயர்வின் பின்னணியிலுள்ள கணிப்பீடு மற்றும் தன்மை பற்றிய புதிர் இன்னும் தெளிவற்றுக் காணப்படும் அதே வேளை, மூளை வெளியேற்றத்தின் (brain drain ) பாதிப்புக்கள் இந்த கலந்துரையாடல்களில் முக்கிய பேசு பொருளாக இருக்கின்றன. மூளை வெளியேற்றம் தொடர்பான கருதப்பாடு செல்லுபடியானதாகும்,

குடிபெயர்வின் சிக்கலான பிரயோகங்கள் தொடர்பான எமது புரிந்துணர்வை மட்டுப்படுத்த முடியும் என்பது பற்றி இன்னும் கவனம் செலுத்தப்படுகின்றது. குடிபெயர்வின் சவால்கள்களுக்கு மேலதிகமாக இந்த இணையப் பக்கம் விவாதிக்கின்றது, இளைஞர் குடிபெயர்வானது உபாயரீதியாக முகாமை செய்யப்படுமாயின், சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக சில வியத்தகு வாய்ப்புக்களை இளைஞர் குடிபெயர்வு முன்வைக்க முடியும்.

## இளைஞர் குடிபெயர்வுகள்

புதிய சமூக மற்றும் பொருளாதார தரவுகள் (Social and Economic Statistics) மற்றும் இலங்கையில் ஊழியர்படை ஆய்வுகளுக்கு (Labour Force Surveys) ஏற்ப, அண்மைய காலத்தில் 15 - 29 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் சமூகத்தினர் மத்தியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறும் அளவு சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது குறிப்பிடத்தகு அதிகரிப்பொன்றன்று.

மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்.

2020 ஆம் ஆண்டில் தொற்றுநோயால் தூண்டப்பட்ட மிக சமீபத்திய நிகழ்வாக, இடம்பெயர்வு அதிகரிப்பு என்று வாதிடலாம், மேலும் கல்வி போன்ற பிற நோக்கங்களுக்காக இளைஞர்கள் அடிக்கடி வெளியேறுவதும் சாத்தியமாகும், அதற்கான புள்ளிவிவரங்கள் பொதுவில் கிடைப்பனவில் இல்லை. விடயங்களை மேலும் சிக்கலாக்கும் வகையில், பெரும்பாலான இளைஞர்கள் கல்வியை வெளிநாட்டில் நீண்டகாலம் வதிவிடுவதற்கான வழியாக கருதுகிறார்களா அல்லது அவர்கள் பெற்ற தகுதிகளுடன் இலங்கைக்குத் திரும்ப விரும்புகிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சுகாதார கொள்கை நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்து கண்காணிப்பு ஆய்வு (Opinion Tracker Survey carried out by the Institute of Health Policy) ஒரு தெளிவான பதிலை வழங்குகிறது. 18 - 29 வயதிற்குட்பட்ட இளைஞர்களில் 48% சதவீதமானவர்கள் குடிபெயர்வதற்கு அதிக விருப்பம் கொண்டுள்ளனர் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால், மேல் மாகாணம் போன்ற பகுதிகளில் உள்ள மக்களே குடிபெயர்வதற்குத் தயாராகும் திறனைக் அதிகமாக வெளிக் காட்டினார்கள். இது விமானக் கட்டணம், பாடநெறிக் கட்டணம் மற்றும் ஆரம்ப வாழ்க்கைச் செலவுகள் உள்ளிட்ட அதிக ஆரம்பச் செலவு காரணமாக இருக்கலாம். குறுகிய கால வேலைவாய்ப்பைத் தவிர வேறு குறிக்கோள்களுடன் புறப்படுதல், முக்கியமாக உயர் மற்றும் நடுத்தர வருமானக் குழுக்களுடன் தொடர்புடையதாக புலப்படுகின்றது.

மூளை வெளியேற்றம் அல்லது அதிக புலமைபெற்றவர்களின் குடிபெயர்வு என்பது அடிக்கடி விவாதிக்கப்படும் ஒரு முக்கிய விடயமாகும். இந்த சமூக துண்டங்கள் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான நிலையான கேள்வி மூலத்தை வழங்குவதுடன் முதலீடுகளுக்கு பங்களிப்புச் செய்வதனால் வெளியேறும் குடிபெயர்வு பொருளாதார வளர்ச்சியை பாதிக்க முடியும். பொருளாதார பாதிப்புக்களுக்கு புறம்பாக, அவ்வாறான சமூகங்கள் நாட்டின் முக்கிய சமூக - அரசியல் சக்திகளையும் கொண்டுள்ளன. முழு அளவிலான தரவுகள் கிடைப்பனவில் குறைபாடுகள் காணப்படுகின்றமையினால் இளைஞர்களின் அபிலாசைகளின் முழுமையான அவாவினை புரிந்து கொள்வது கடினமாக இருக்கின்ற போதும், குடிபெயர்வின் பாதகமான தாக்கங்களை தவிர்ப்பதற்கும் மற்றும் அதன் பிரத்தியேக நன்மைகளை சமநிலைப்படுத்துவதற்கு அதிகமானதொரு உபாயவழி அணுகுமுறை இன்னும் உத்தரவாதம்மளிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் குடிபெயர்வு மற்றும் அபிவிருத்தி திரும்பும் குடிபெயர்வு

இலங்கையில் மிகவும் பெறுமதிமிக்கதொரு வளமாக மனித மூலதனம் இருப்பதனால், மூளை வெளியேற்றம் ஆபத்தானதாகும். மாறாக, அதிக அறிவு மற்றும் திறன்களைப் பெற்றவர்கள் மீண்டும் உள்நாட்டுக்கு குடிபெயர்வானது மனித மூலதனத்தின் இருப்பை அதிகரிக்கும். இருப்பினும், நாட்டுக்கு திரும்பும் இளைஞர்களை உள்வாங்குவதில் உள்ள சவால்களும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும், ஏனெனில் வெளிநாடுகளில் பெற்ற திறன்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் தற்போதுள்ள தொழிலாளர் சந்தை தேவை ஆகியவற்றில் பொருத்தமின்மை இருக்கலாம். இது தவிர, 15 - 24 வயதுக்குட்பட்டவர்களிடையே அதிக வேலையின்மை விகிதம் (26.5%) ஏற்கனவே நாட்டில் நிலவுகிறது. எனவே, வளர்ச்சி மற்றும் புதுமைக்கான சாத்தியக்கூறுகள் மற்றும் ஒரு சாதகமான வணிக சூழல் மற்றும் நிதி அமைப்பை எளிதாக்குகின்ற குறிப்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இளைஞர்களுக்கு அதிக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவது அவசியம் ஏனெனில் அதனால் அறிவு மற்றும் திறன்களை உற்பத்தி, இலாபகரமான முறையில் பயன்படுத்த முடியும்.

## வருமானங்கள்

நிலவும் அந்நிய செலாவணி பற்றாக்குறை தொடர்பாக குடிபெயர்வு மற்றும் பணம் அனுப்புதல் பற்றி பரவலாக விவாதிக்கப்பட்டது. தரவு கிடைப்பனவு காரணமாக இளைஞர்கள் மாத்திரம் பணம் அனுப்புவதை மதிப்பிடுவதில் சில சிரமங்கள் இருந்தாலும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 2020 ஆம் ஆண்டில், மத்திய கிழக்கு (51.7%) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (ஐரோப்பிய ஒன்றியம் (19%) போன்ற பிராந்தியங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக அதிக பங்களிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதேசமயம் வட அமெரிக்கா அல்லது ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற பிராந்தியங்களிலிருந்து மொத்தப் பணம் அனுப்பும் தொகையில் 2.5% இற்கு பங்களிப்புச் செய்தள்ளது. முன்னர் தொழில்புரிந்த பிராந்தியங்களுக்குச் செல்லும் பலர் இலங்கையில் தங்கள் குடும்பங்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான வழக்கமாக பணம் அனுப்பும் தற்காலிக பணியாளர்கள் என்பதால் வெளிநாட்டு வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

இலங்கையர்கள் அல்லது இலங்கை வம்சாவளியினரின் கணிசமான சமூகங்களுடன் பிந்திய பகுதிகளில் இருந்து பாய்ச்சல்களை மேம்படுத்த சில சாத்தியங்கள் உள்ளன. குறிப்பாக அரசு மற்றும் அரசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து பாடசாலை அல்லது பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கங்கள், தன்னார்வ குழுக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற வலையமைப்புகள் மூலம் இளைஞர்களின் முன்முயற்சியுடன் ஈடுபடலாம்.

## முதலீடு

சற்றே இடர் இல்லாத சமூகமாக, குறிப்பாக இளைஞர்களிடையே இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் முனைவோர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் ஸ்தீரமற்ற பொருளாதார நிலைமைகள், ஒப்பீட்டளவில் மோசமான வர்த்தகச் சூழல் (2020 இல் எளிதாக தொழில் செய்யக்கூடிய குறியீட்டில் 99 வது இடம்), வரையறுக்கப்பட்ட மூலதனம் மற்றும் எதிர்மறையான சமூக மனப்பான்மை ஆகியவற்றால் இது புரிந்துகொள்ளக் கூடியது. மாறாக, புலம்பெயர் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள், பாதுகாப்பாக குடியமர்த்தப்பட்டவுடன், மூலதனத்திற்கான அதிக பிரவேசத்தைப் பெற வாய்ப்புள்ளது மற்றும் புதிய விதிமுறைகள் மற்றும் மனோபாவங்கள் தொடர்பாக அவர்கள் வெளிப்படுவதால், ஆபத்து - எதிர்ப்பின்மை குறைவாக இருக்கலாம்.

புலம்பெயர்ந்த சமூகங்களுடன் இணைவதன் மற்றொரு நன்மை என்னவென்றால், பொருளாதார வாய்ப்புகள், குடும்பம் மற்றும் நண்பர்களை ஆதரிப்பதற்கான விருப்பம் மற்றும் தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்கும் விருப்பம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவர்கள் தங்கள் சொந்த நாட்டோடு உறவுகளைப் பேணுவதில் பரஸ்பர ஆர்வம் காட்டுகிறார்கள். வாய்ப்புகளை கண்டறிந்து தேவையான இடத்துடன் தொடர்புபடுத்தி அத்துடன் எளிமையான செயன்முறைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் மூலம் முயற்சிகளை எளிதாக்குவதன் ஊடாக சமநிலையான பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகளாகும்.

படம்: இலங்கை பாடசாலை சங்கங்கள் மற்றும் கழகங்கள்ள்மற்றும் பல்வேறுபட்ட தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அவுஸ்திரேலியாவின் கழகங்கள் மற்றும் ரக்பி விக்டோரியா, விக்டோரியா மாணிலத்தின் ரக்பி ஒன்றியத்தின் நிருவாக சபைக்கும் இடையேயான டச் ரக்பி அணிக்கு ஏழு பேர் கொண்ட போட்டித் தொடர்

சுருக்கமாக, சில இளைஞர்கள் அண்மைக் காலத்தில் குடிபெயர்வதற்கு வெளிக்காட்டிய வெகுவான அபிலாசைகளுடன், இந்த நிலைமை சவால்கள் மற்றுமல்லாது வாய்ப்புக்களையும் வெளிப்படுத்துகின்றது. வெளிநாடுகளில் வதிவிலுள்ள இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் அவர்கள் முன்னாயத்தத்துடன் செயற்படுவார்களாயின் இலங்கைக்கு பங்களிப்புச் செய்வதற்கு குறிப்பிடத்தகு ஆர்வத்தை பேணுவர். எனினும் இவ்வாறான முன்னெடுப்புக்கள் மிக்க் கவனமாக மேற்கொள்ளப்படுவதல் வேண்டும் ஏனெனில் பிழையான அர்ப்பணிப்புக்கள் மற்றும் பாரிய அசௌகரியங்கள் அதைரியப்படுத்துவதுடன் குடிபெயர்ந்த இலங்கையர்கள் தங்களுடைய நாடு பற்றிய பிணைப்பினை பேணிப் பாதுகாப்பதில் மேலதிக முற்சிகளுக்கு அதைரியத்தையும் ஏற்படுத்த முடியும்.

ஐபிஎஸ் டோக்கிங் எகனொமிக்ஸ் என்ற மூல பதிவிற்கு பிரவேசிப்பதற்கு :https://www.ips.lk/talkingeconomics/2022/02/07/youth-migration-challenges-and-opportunities-for-sri-lanka/




### கட்டுரையாளர் பற்றி



இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனத்தில் குடிபெயர்வு மற்றும் நகரமயப்படுத்தல் கொள்கை ஆராய்ச்சி தொடர்பில் ஆராய்சி உதவியாள ராக திசுரி ஏக்கநாயக்க பணியாற்றுகின்றார். கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து பொருளாதாரத் துறையில் பிஏ (சிறப்பு) பட்டத்தைப் பெற்றுள்ளார். 2020 சர்வதேச நாணய நிதிய சவால்களில் பங்குபற்றியதுடன் சுவிட்சலாந்து, லுசேனில் புத்தாக்கம், கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான பிசு உலக மாநாட்டில் ஆராய்சி பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஒரு பட்டப் பின்படிப்பு மாணவியாக, கலைப் பீடத்தில் முதல் வருட பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றமைக்காக புலமைப் பரிசில் ஒன்றையும் பெற்றுள்ளார்.

கோடி ரூபாய் கொட்டும்

# விநோத சுரண்டல்

## 100 கிராமுக்கு இரண்டு கிலோ கணக்கு:





எம். செல்வராஜா

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் இதுவரையில் வெளிவராமலிருக்கும் சிறியளவிலான சுரண்டல்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து கோடிக் கணக்கான ரூபாயை கொள்ளையடிப்பதாக அமைந்துள்ளன.

தொழிலாளர்கள் நாளாந்தம் கொய்யும் தேயிலைத் தளிர்களில் மட்டும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மேற்படி சுரண்டல்கள், மாதமொன்றுக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் இடம்பெற்று வருவதாக மதிப்பிடப்படுகின்றது.

ஆரம்ப காலத்திலிருந்து, தேயிலைத் தளிர்களை நிறுக்கும் தராசுகள் பல்வேறு வகைகளில் அமைந்து, தற்போது நவீன முறையிலான 'டிஜிட்டல்' தராசு முறைமை, பெரும்பாலான தோட்டங்களில் பின்பற்றப்படுகின்றது. இவ்வகையிலான 'டிஜிட்டல்' தராசுகளில் காண்பிக்கப்படும் எடைகள் குறித்த சந்தேகம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து, ஹப்புத்தளைப் பகுதியின் பண்டாரயெலிய பெருந்தோட்டப் பிரிவின் தொழிலாளர்கள் 'டிஜிட்டல்' தராசு பயன்பாட்டை அகற்றக்கோரி, தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக கடந்த ஒன்பதாம் திகதி பணிப்பகிஸ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணியை மேற்கொண்டிருந்தனர். தாம் கொய்யும் தேயிலைத் தளிர்களில், இத்தராசு எடைகளைக் குறைப்பதாக அத்தொழிலாளர்கள் உணர்ந்து, ஊடகங்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

நவீன முறையிலான 'டிஜிட்டல்' தராசுகளின் நிலை இவ்வாறிருக்க, ஏற்கெனவேயுள்ள தராசுகளில் தேயிலைத் தளிர்களின் எடை சுரண்டல்கள் நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றது. ஆனால், இச்சுரண்டல்களை தோட்டத் தொழிலாளர்களோ, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களோ தட்டிக் கேட்டதாகத் தெரியவில்லை.

தோட்டத் தொழிலாளியொருவர் தொழில் கடமையில் ஈடுபடும் தினமொன்றுக்கு மூன்று தடவைகள், அவர்கள் கொய்யும் தேயிலைத் தளிர்கள், தராசுகளில் நிறுக்கப்பட்டு வருகின்றன. காலை 9மணி, பகல் 12 மணி, மாலை 4 மணி என்ற வகையில், யூரியா உரப்பை, சாக்குகள் ஆகியவற்றில் தேயிலைத் தளிர்கள் கொட்டி நிறுக்கப்படுகின்றன. தோட்டங்களுக்குத் தோட்டம் வித்தியாசப்படும் வகையில், யூரியா உரப்பை, சாக்குகள் ஆகியவற்றுக்கு இரண்டு - மூன்று கிலோ கிராம் என்ற வகையில் தேயிலைத் தளிர்களில் மொத்த எடையில் கழிக்கப்படுகின்றன.

பெருமளவிலான தோட்டங்களில் யூரியா உரப்பையோ தேயிலை தளிர்களை கொட்டி நிறுப்பதற்கு பயன்படுத்தப்படுவதால் இரண்டு கிலோ கிராம் எடையே யூரியா உரப்பைக்கு கழிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் ஆறு கிலோ தேயிலைத் தளிர்கள் ஒரு தொழிலாளியிடம் ஒரு நாளைக்கு கழிக்கப்படுகின்றது. ஆனால், யூரியா உரப்பையின் எடையோ நூறு கிராமைக் கொண்டதாகவேயுள்ளது. அப்படியிருந்தும் அந்த உரப்பைக்கு இரண்டு கிலோ என்ற வகையில் கழிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வகையில் தொழிலாளியொருவர் மாதமொன்றில் 20 தினங்கள் தொழில் கடமைகளில் ஈடுபட்டாரெனில் (20 x 6) 120 கிலோ கிராம் தேயிலைத் தளிர்கள் சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு தெரியாமலேயே, தோட்ட நிர்வாகத்தை சென்றடைகின்றன. ஒரு தோட்டத்தில் நூறு தொழிலாளர்கள் தொழில் கடமைகளில் ஈடுபட்டார்களாயின் மாதமொன்றில் 12 ஆயிரம் (120 x 100) கிலோ கிராம் தேயிலைத் தளிர்கள், அவர்களை அறியாமலேயே அவர்கள் இழக்கின்றனர்.

மலையகத்தின் பெருந்தோட்டப் பகுதிகளில் ஒரு இலட்சத்து அறுபத்தி மூன்றாயிரம் தொழிலாளர்கள் நிரந்தர தொழில் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனரென்று புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகின்றது. இவர்களில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் தேயிலைத் தளிர் கொய்யும் கடமைகளில் ஈடுபட்டாலும், ஒரு மாதத்தில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் தோட்டத் தொழிலாளர்கள் தமது வருமானத்தை இழக்கின்றனர்.

தம்மை அறியாமல் சிறுகச் சிறுக ஏற்பட்டு வரும் இழப்பை தோட்டத் தொழிலாளர்கள் பெரியளவில் இழந்து வருகின்றனர். இவ்வகையிலான இழப்பு எந்தவொரு கணக்கறிக்கைகளிலும் குறிப்பிடப்படவில்லை. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் எங்கு செல்கின்றதென்று, பெரும் புதிராகவேயுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் இந்த கண்ணுக்குத் தெரியாத இழப்பு குறித்து, மலையக தொழிற்சங்க சட்ட ஆலோசகர் ஆர். சுப்ரமணியத்திடம் வினவிய போது, “இது போன்ற இழப்பு எமக்கும் தெரியாததொன்றாகும். யூரியா உரப்பைக்கு 2 அல்லது 3 கிலோ கிராம் கழிப்பது ஜீரணிக்கவே முடியாது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த உரப்பை நூறு கிராமை விட குறைவான எடையாகும். இதனை பதுளை தொழில் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு சென்று, தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களிடம் மேற்கொள்ளும் நாளாந்த சுரண்டல்களை வெளிக்கொணர்வேன்” என்றார்.

இது தவிர பிழையான எடையைக் காட்டும் தராசுகள் மூலமும், தொழிலாளர்களின் உழைப்பு திட்டமிட்டுச் சுரண்டப்பட்டு வருகின்றது. இவ்விடயத்தில் பெண் தொழிலாளர்களே முழுமையாகப் பாதிப்படைந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு தேயிலைத் தளிர்கள் நிறுக்கும் விடயத்தில் மலையகத்தில் ஒரு இலட்சத்து அறுபத்து மூவாயிரம் தோட்டத் தொழிலாளர்களிடமும் இருந்து பலகோடி ரூபாய் நிதி தோட்ட நிர்வாகங்களை சென்றடைகின்றன.

ஆரம்ப காலத்தில் தேயிலைத் தளிர்கள் நிறுப்பதற்கு பெரியளவிலான தட்டுகள் இருந்தன. இத் தட்டுகளுக்கு இரண்டு கிலோ கிராம் வீதம் கழிப்பதில், ஓரளவு நியாயம் இருந்தது. தற்போது அத்தட்டுகள் முறை நீக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தேயிலைத் தளிர்களை நிறுக்கும் தராசுகளும் முறையாக எடைகளைக் குறிப்பிடுவதாக இல்லாதுள்ளன. தோட்ட நிர்வாகங்களுக்கு சாதகமான முறையில், தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலுமே, தற்போதைய தராசுகள் அமைந்துள்ளன. இது விடயத்திலும், தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகின்றது.

மட்டக் கொழுந்து மலை என்றழைக்கப்படும் புதிய தேயிலை மலைகளில் தொழிலாளியொருவர் ஒரு கிலோ கிராம் தேயிலைத் தளிர்களை கொய்வதற்கு 450 முதல் 500 தடவைகள் தமது கரங்களைப் பயன்படுத்த வேண்டும். சாதாரண தேயிலை மலைகளில் 600 முறைகளிலும், பழைமை மிகு தேயிலை மலைகளில் 1,200 முதல் 1,500 வரைக்குமாக ஒரு கிலோ தேயிலைத் தளிர்களைக் கிள்ளுவதற்கு, தமது கரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

பெருந்தோட்டங்கள் பராமரிப்பின்றி காடுகளாக காட்சியளிக்கும் இவ்வேளையில், தேயிலைத் தளிர்களை கொய்வதற்கு தேயிலைச் செடிகளை மூடியிருக்கும் புல், பூண்டு, கொடிகளை அப்புறப்படுத்தி, தேயிலைத் தளிர்களைக் கொய்ய வேண்டிய இக்கட்டான நிலையும் பெண் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளன.

இவ்வகையில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் தொழிலாளர்கள் பாம்பு போன்ற விஷ ஜந்துகளிடமிருந்தும், குளவிகளிலிருந்தும் தம்மைப் பாதுகாக்க வேண்டிய அவலங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

தொழிலாளர்களின் தேயிலைத் தளிர்களை நிறுப்பதற்கு, தோட்ட நிர்வாகங்களின் கையாட்களாக, தோட்டக்கங்காணிகளே பயன்படுத்தப்படுகின்றனர். இக் கங்காணிகளே, ஒரு சில தொழிற்சங்கங்களின் தோட்டக் கமிட்டித் தலைவர்களாகவும் இருந்து வருகின்றனர். தொழிற்சங்கங்களின் தோட்டக் கமிட்டித் தலைவர்களாகியதுமே, தோட்ட நிர்வாகத்தால், அவர்களுக்கு கங்காணி வேலைகள், இலகு வேலைகள் வழங்கப்படுகின்றன. இது ஒரு வகையில் இலஞ்சமாகும். அதனால், அவர்கள் தோட்ட நிர்வாகங்களுக்கே விசுவாசமாக இருந்து, தாம் சார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு வகைகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

தேயிலைத் தளிர்களை நிறுக்கும் விடயத்தில் இடம்பெறும் மோசடிகளை தட்டிக் கேட்பதற்கு, எந்தத் தொழிலாளியும் முன்வருவதில்லை. அப்படியே கேட்டாலும், கேட்கும் தொழிலாளிக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகிறன. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளி ஒருவரின் வழக்கு பதுளை தொழில்மன்றில் நடைபெற்று வருகிறது. ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் ஆ. முத்துலிங்கம், இது தொடர்பான வழக்கை தாக்கல் செய்துள்ளதோடு, பாதிக்கப்பட்ட தொழிலாளி சார்பாக வாதாடியும் வருகின்றார்.

தற்போது பதுளைப் பகுதியில் ஒருசில தோட்டங்களில் பிளாஸ்டிக் தட்டங்கள் மற்றும் கத்திகள் ஊடாக தேயிலைத் தளிர்களைக் கொய்யும் முறையும் பின்பற்றப்படுகின்றன. இம்முறையின் மூலமும் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படவே செய்கின்றனர்.

தோட்டத் தொழில்துறை மூலம் பெரும் இலாபங்களை, தோட்ட நிர்வாகங்கள் ஈட்டி வந்த போதிலும், தோட்டத் தொழில்துறை பாரிய நஷ்டத்திலேயே, இயங்குவதாக தோட்ட நிர்வாகங்கள் அடிக்கடி கூறி வருகின்றன.

ஆகையால், பெருந்தோட்டங்களையும், அதனை நம்பியிருக்கும் தொழிலாளர்களையும் பாதுகாக்க அரசு முன்வர வேண்டும். பெருந்தோட்டங்களில் நிலவும் நேரடி, மறைமுக ஊழல், மோசடிகளை விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வேண்டும். இதனடிப்படையிலேயே பெருந்தோட்டங்களையும், மக்களையும் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

நாட்டுக்கு நல்ல உதாரணங்கள்:

# தட்டப்பட வேண்டிய தூசுகள்

## சகவாழ்வின் முக்கியத்துவமும் பிரித்தாளும் சூழ்ச்சிகளின் விளைவுகளும்







ஏ.எச்.ஏ. ஹுஸைன்
(husseinmedia000@gmail.com)





“எல்லா ஜாதியினரும் ஒன்றாக ஐக்கியமாக சிரித்துக் களித்துப் பேசிப் பயணிக்கிறீர்களே, இது எப்படி உங்களால் முடிகிறது? என்று குருநாகலில் ஒரு ஹோட்டல் உரிமையாளர் எங்களிடம் கேட்டது, நாட்டு நடப்புகளை படம்போட்டுக் காட்டுகிறது” என்று தனது ஆதங்கத்தை வெளியிடுகிறார் சிலாபம் சமாதான சமூக சகவாழ்வு ஆர்வலரான சஞ்ஜன பெர்ணான்டோ.

தற்போதைய இனவாதப் போக்கை மறுதலிக்கும் வண்ணம், இன மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி, மூவின மக்களும் ஒன்றிணைந்து புத்தளத்திலிருந்து மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டபோது, வரும் வழியில் குருநாகலில் உள்ள ஹோட்டல் உரிமையாளரால் இந்தக் கேள்வி கேட்கப்பட்டதாக சஞ்ஜன தெரிவித்தார்.

இது நாட்டின் சமகாலப் போக்கை, நாடி பிடித்தறிவதற்குப் போதுமான ஆதாரமாகும். நல்லிணக்க விஜயம் மேற்கொண்டு, மட்டக்களப்புக்கு வந்திருந்த மூவின மக்களுக்கும் ஏறாவூர், ஐயன்கேணிப் பகுதியில் வைத்து பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களால் பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

பிரதேசமட்ட பல்சமய சமாதானக் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் சிலாபம், புத்தளம் மாவட்டங்களின் சர்வமத சமூக சக வாழ்வு விரும்பிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சகவாழ்வின் முக்கியத்துவமும் பிரித்தாளும் சூழ்ச்சிகளின் விளைவால் ஏற்படக் கூடிய ஆபத்துகள் பற்றியும் சமாதான சகவாழ்வை விரும்பும் ஆண்கள், பெண்கள் என அங்கு கலந்து கொண்ட பிரதிநிதிகள் சிலாகித்துப் பேசினர்.

நிகழ்ச்சியின் நிறைவில் நட்பின் அடையாளமாக ‘பரஸ்பரம் கஷ்டத்தில் உதவுவோம்’ எனும் தொனிப்பொருளில் புத்தளம், சிலாபம் சர்வமத சக வாழ்வு ஆர்வலர்களால், ஐயன்கேணி பிரதேச சமாதானக் குழுச் செயற்பாட்டாளர்களுக்கு தேங்காய் உட்பட மரக்கறிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இன ஐக்கிய சகவாழ்வு முறையை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டங்களின் ஓர் அம்சமாக இந்த பல்லினங்கள் இணைந்த கள விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிலாபம் எஹெட், கரிற்றாஸ் ஆகிய நிறுவனங்களின் சமாதானத் திட்டத்துக்காகப் பணியாற்றும் சஞ்ஜன பெர்ணான்டோ, “ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும். பிரிந்து நிற்பதால், அரசியல்வாதிகளும் இனவாதிகளுமே நன்மையடைந்து விடுவார்கள். நாங்கள் கைசேதப்பட்டு, நஷ்டமடைந்து விடுவோம். நாம் முதலில் மனிதர்கள்; இந்த மனித மாண்பை ஒருபோதும் இழந்து விடக் கூடாது” என்று வலியுறுத்துகிறார்.

முன்னர் யுத்தத்தால் தமிழர்களையும் எங்களையும் பிரித்து வைத்தார்கள். யுத்தம் முடிவடைந்து கொஞ்சக் காலத்தில் ஏதோவெல்லாம் தாக்குதல்களோடு தொடர்புபடுத்தி முஸ்லிம்களையும் எங்களையும் பிரித்து வைத்து விட்டார்கள். இப்பொழுது, நாங்கள் இவையெல்லாம் பிரித்தாளும் சூழ்ச்சிகள் என்று நன்கு அறிந்து கொண்டோம் என்கிறார் சிலாபம் சிங்களப் பிரதேசத்தில் இன ஐக்கியத்துக்காகப் பாடுபடும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த நிரோஷா.

“தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள்; நாங்கள் அயலவர்களாக அடுத்தடுத்த வீடுகளில், பரஸ்பரம் உதவி ஒத்தாசை புரிந்து கொண்டு, இணைந்து வாழ்கின்றோம். எங்களுக்கிடையில் பதற்றம் இல்லை; பயம், அச்சம் இல்லை. மாறாக, அன்பும் ஆதரவும் அக்கறையுமே நிறைந்திருக்கிறது” என்கிறார் புத்தளத்திலிருந்து சமாதானக் குழுவினருடன் விஜயம் செய்த தமிழ் சமூக குடும்பப் பெண்ணான ஏ. சகுந்தலா.

குழுவினருடன் வந்திருந்த வேளையில் எந்நேரமும் சிங்கள தமிழ் தோழிகளுடன் ஒன்றாக தோளில் கைபோட்டுக் கொண்டு மகிழ்ச்சியாக உலாவித் திரிந்த ஏ.என். பாத்திமா நஸீஹாபானுவிடம் சகவாழ்வு சமாதானம் பற்றிக் கேட்டபொழுது, “நான் புத்தளம், கொத்தாந்தீவில் வசிக்கின்றேன். எனது அயல் வீட்டுக்காரர்களும் தோழிகளுமாக சிங்கள, தமிழ் உறவுகளே இருக்கிறார்கள். எங்களுக்கிடையில் ஒருபோதும் இன, மத, அரசியல் வேறுபாடுகளால் வன்முறைகள் இடம்பெற்றதில்லை. அதனால் நாங்கள் நிம்மதியாக வாழ்கின்றோம்” என்கிறார்.

இவை நாட்டுக்கு நல்ல உதாரணங்களாகும்.

தமிழர்களும் முஸ்லிம்களும் ‘புட்டும் தேங்காய்ப் பூவும் போல’ ஒரு காலத்தில் ஒன்றாக வாழ்ந்தோம் என்ற பழங்கதையைத்தான் இன்னமும் நாம் கூறிக்கொண்டிருக்க வேண்டியதாகி விட்டது.

நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளை எடுத்துக் கொண்டால், யுத்த வன்முறைகளுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஐக்கியம் அப்படியொரு சௌஜன்ய நட்புறவாகப் பரிணமித்திருந்தது. பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருந்து உதவி ஒத்தாசை புரிந்து, உறவுகளாய் வாழ்ந்தார்கள். வயல் வேலையில் தொடங்கி வர்த்தகம் வரையிலும் பாலர் வகுப்பில் ஆரம்பித்து பல்கலைக்கழகம் வரையிலும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூக உறவென்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வந்திருக்கிறது என்பதை பின்னோக்கிய மீட்டல் வரலாறுகள் நமக்குப் புரியவைக்கின்றன.

ஆனால், நாட்டில் நிலவி வந்த இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தையும் சமூக சௌஜன்யத்தையும் துவேச சிந்தனையின் வெளிப்பாடாக பின்னாள்களில் உருவான அரசியல் இனவாதமும் யுத்தமும் சீர்குலைத்து விட்டன.

மனப்பாங்குகளில் ஏற்பட்ட நச்சு வட்டம் செயற்பாடுகளாக மாறி, உயிர் உடமை இழப்புகளுக்கு வழி வகுத்ததோடு இனச் சுத்திகரிப்பையும் இனங்களுக்கிடையிலான தீராப் பகையையும் வளர்த்து விட்டன.

இழப்புகளை எப்போதாகிலும் ஓரளவு ஈடு செய்யக் கூடியதாக இருந்தாலும் கூட, மன நிலையில் இணக்கமாக இருந்த இனங்களுக்கிடையிலான உறவு தகர்ந்து போனதுதான் துர்ப்பாக்கியமாகி விட்டது.

போனது போகட்டும்; இழந்து விட்ட இன ஐக்கியத்தை இனியாகிலும் மீண்டும் இறுக்கமடையச் செய்யலாம் என்றால், அதற்கும் இன்னமும் இருக்கின்ற ஒரு சில இழிவான மனநிலைகள் இடம் தருவதாக இல்லை.

வன்முறையாலும் இனவாதத்தாலும் வளர்க்கப்பட்ட அற்பத்தனமான துவேச சிந்தனைகள், இன்னமும் பல அரசியல்வாதிகளிடமும் சில அதிகாரிகளிடமும் குடிகொண்டிருக்கின்றன.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையோடு விரட்டப்பட்ட பல அகதிக் குடும்பங்கள் இன்னமும் அவர்களுக்கு நிவாரணமோ இழப்பீடுகளோ எதுவும் வழங்கப்படாத நிலையில் கதியற்றவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள். இத்தகையதொரு துயரத்தில் அவர்கள் இருந்தாலும் கூட, அவர்கள் சுயமாகவேனும் தங்களை மீளமைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது, ஒரு சில அதிகாரிகள் அதைத் தடுத்து வருவதாகப் பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிக்கிறார்கள்.

சுமார் கால் நூற்றாண்டுக்குப் பின்னர் இனியாவது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி நிம்மதியாக வாழலாம் என்றால் அதற்கும் பல வித தடை விதிப்பதாகப் பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிக்கிறார்கள்.

ஐக்கியத்தை விரும்பும் அனைவரும் இப்பொழுதும் பாரபட்சம் காட்டி இனப்பகைமையோடு இயங்கும் நபர்களை, அடையாளம் கண்டு அவர்களது மட்டரகமான மனப்பான்மையைத் தகர்த்தெறிய வேண்டும். இல்லையேல் எமது இளம் சந்ததியினரின் எதிர்காலம் பாழாகி விடும்.

எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்தவரும் தமது அதிகார பலத்தையோ அல்லது அரசியல் அடாவடித்தனங்களையோ பிரயோகித்து இனிமேல் எவரையும் அடிமைகளாக வைத்திருக்க முடியாது என்பதை அனைவரும் ஐக்கியப்பட்ட சமூகமாகச் சேர்ந்து உலகுக்கு உணர்த்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் அவர்கள், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்தப் பாதிப்பின் தன்மையிலிருந்து மீண்டெழ வேண்டும். இதற்கான வழிவகைகளை எல்லோரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கு மாற்றமாக, துன்பத்திற்குள்ளான மக்களை மேலும் துயரடைய வைப்பது மனிதாபிமானமல்ல.

பாதிப்புகள் பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கலாம்; அது எத்தகையதாக இருந்தாலும், அந்தப் பாதிப்புகளிலிருந்து மீண்டெழுவதற்கான உரிமை பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உண்டு. பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்கள் தங்களை மீளமைத்துக் கொள்வதற்கும் தடையாக இருக்கும் எவரும் தங்களது போக்குகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றே பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நேற்று முன்தினம் (24) காசநோய் தினம்:

# கொரோனாவும் காசநோயும்




**க. அகரன்**

வவுனியா மாவட்டத்தில் காச நோயை கட்டுப்படுத்த, வவுனியா பொது வைத்தியசாலையின் மார்பு சிகிச்சை பிரிவினருடன் வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி வவுனியா வைத்தியசாலையின் ஏனைய உத்தியோகத்தர்களும் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மார்ச் 24, காச நோய் தொடர்பான விழிப்புணர்வு நாளாக காணப்பட்ட நிலையில், இம்முறை 'காசநோயை இல்லொதொழிப்பதற்கு முதலிடுவதன் மூலம் உயிர்களை காப்பாற்றுவோம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெற்றன.

இதுதொடர்பாக, வவுனியா பொது வைத்தியசாலையின் காச நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் கே. சந்திரகுமாருடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது:

**கேள்வி: காசநோய் தொடர்பாக மக்கள் அசண்டையீனமாக உள்ளனரா?**

பதில்: பொதுமக்கள் காசநோய் தொடர்பில் பழைய காலம் போன்றே சிந்திக்கின்ற தன்மை காணப்படுகின்றது. பழைய காலத்தில் காசநோய் வந்தால், அவர்களை தனிமையான இடத்தில் வைத்து பராமரிப்பர். குறிப்பாக, மயிலிட்டி, பண்ணை, வெலிசற ஆகிய வைத்தியசாலைகளில் தனிமையில் வைக்கப்பட்டு வைத்தியம் செய்யப்பட்டது. அந்த நினைப்பு, இன்னும் சிலருக்கு உள்ளதால் காச நோயை பயங்கர வருத்தமாக பார்க்கின்றனர். காச நோயை 100சத வீதம் குணமாக்க முடியும்.

**கேள்வி: காச நோய் கிருமி உடலில் எவ்வாறு தாக்கம் செலுத்தும்?**

பதில்: காசநோய் கிருமி இருமல் காரணமாக எமக்குள் வந்து, சுவாசப்பையை தாக்குவது மாத்திரமின்றி, ஏனைய உறுப்புகளையும் தாக்கும். இதனை நாம் சுவாசப்பைக்கு அப்பாலான தொற்றாகப் பார்க்கின்றோம். சிலர் நெறி போட்டதாக கட்டியுடன் மாத்திரம் வருவார்கள். இவை சாதாரண மருந்துக்கு குறையும். இதனால் அவர்கள் வருத்தம் மாறி விட்டதாக நினைப்பார்கள். காச நோய் கிருமி நகத்தையும் மயிரையும் தவிர, உடலில் அனைத்து பகுதிகளிலும் தொற்றும்.

வயோதிபர்கள், எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோய் உள்ளவர்கள், எச்.ஐ.வி உள்ளவர்கள், உடலில் சத்து குறைந்தவர்கள், சிறுவர்களை பொறுத்தவரையில் காசநோய் இருமலால்த்தான் வரும் என்று இல்லை. இவர்களுக்கு காசநோய் பரவும் வாய்ப்பு அதிகமுள்ளது.

மற்றும், சுகாதார திணைக்களத்துடன் சம்பந்தப்பட்டவர்களது (Late and TB) உடம்புக்குள் காசநோய்க்கான கிருமி சென்றிருக்கும். ஏனெனில் பல நோயாளர்களை பார்வையிடுகின்றனர். எனினும் மார்பக சிகிச்சை பிரிவில் பணியாற்றும் சுகாதார தரப்பினர் பல காலமாகவே முக கவசம் அணிந்தே பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன் ஆடை தொழிற்சாலைகள், பாடசாலைகள், வயோதிபர் இல்லம், சிறுவர் இல்லங்களில் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் அவ்வாறான இடங்களில் நாம் அடிக்கடி சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றோம்.ஆகவே Late and TB என்பது அவர்களுக்குத் தொற்று காணப்படும்; எதிர்ப்பு சக்தி அதிகம் என்பதால் அந்தக் கிருமி வெளியில் தெரியாமல் இருக்கும். குறிப்பாக, சுகாதார திணைக்களத்தினர் எதிர்ப்பு சக்தி கூடியவர்கள் என்பதால், கிருமி வெளியில் தெரியாமல் இருக்கலாம்.

அறிகுறி வெளிப்படாத இவ்வாறானவர்களுக்கு இரண்டு, மூன்று பரிசோதனைகள் செய்வதனூடாக கண்டு பிடிக்கலாம். கையில் ஒரு மருந்தை ஏற்றி, அந்த மருந்தின் தாக்கத்தை வைத்து நோய் தொடர்பில் கண்டு பிடிக்கும் முறையும் உள்ளது.

**கேள்வி: இருமல் காரணமாக காச நோய் பரவுமாக இருந்தால், சமூக இடைவெளி பேணப்படுதல் அவசியமா?**

பதில்: கொரோனாவுக்கு மூன்று அடி தள்ளி நின்றால் போதுமானது எனக் கூறப்படுகின்றது. ஆனால், காசநோய்க்கு 10 அடி தள்ளி நின்றாலும் அது பரவும். குளிரூட்டப்பட்ட அறை என்றால் அந்த இடத்தில் கிருமி சுற்றும் வாய்ப்புள்ளது.

**கேள்வி: காசநோயை இலங்கையில் இருந்து அகற்ற முடியுமா?**

பதில்: 2035ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து முற்றாக காச நோயை இல்லாது ஒழிப்பதே எமது இலக்கு. ஆகவே 100 சதவீதம் இனம் காணப்படுபவர்களை கண்டு பிடித்து மருந்து வழங்கலாம். இவ்வாறு இலங்கையில் இருந்து காச நோயை இல்லாமல் செய்யலாம்.

வவுனியா மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 52 பேரும் 2020ஆம் ஆண்டு 47 பேரும் இணங்கானப்பட்டுள்ளதுடன் 2021ஆம் ஆண்டு இந்நோயடல் 08 பேரும், 2020ஆம் ஆண்டு 07 பேரும் மரணமாகியுள்ளனர். இந்த இறப்புக்களுக்கு காலம் தாழ்த்தி சிகிச்சை பெற்றுக்கொண்டமை முக்கிய காரணமாகும்.

காசநோயை பொறுத்த வரை, இலங்கையில் 2021ஆம் ஆண்டு 6,771 பேர் இணங்காணப்பட்டுள்ளதுடன், 2020ஆம் ஆண்டு 500 பேர் வரை காச நோயால் மரணமடைந்துள்ளனர்.

இவ்வாறு இனம் காணுவதற்கு, காச நோய்க்கும் கொரோனாவுக்கும் வெளிப்பாடாக இருமல் காணப்படுகின்றது. கொரோனா காரணமாக நாம் அன்டிஜன் பரிசோதனையுடன் கைவிட்டு விட்டோம். காச நோய் என்பதனை மறந்து விட்டோம்.

எதிர்காலத்தில் கொரோனாவுக்கான பரிசோதனையை மேற்கொள்ளும் பொது காச நோய்க்கான பரிசோதனையையும் மேற்கொண்டால் காச நோயாளர்களையும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கும்.

**கேள்வி: கர்ப்பிணி தாய்க்கு காச நோய் இருக்குமாயின் பிறக்கும் குழந்தையும் காசநோயுடன் பிறக்கும் வாய்ப்புள்ளதா?**

பதில்: கர்ப்பிணி தாய்க்கு காசநோய் இருந்தாலும் பிள்ளை வயிற்றில் இருக்கும் போது பிள்ளைக்கு நோய் தொற்றும் என்றில்லை. குழந்தை பிறந்த பின்னர் தாயின் வாயில் இருந்தும் மூச்சுக்காற்று மூலமும் பிள்ளைக்கு பரவும். எனினும் நாங்கள் பிறந்த பிள்ளைகளுக்கு BCG என்ற தடுப்பூசியை வழங்குகின்றோம். அது காச நோயால் வரும் பாரிய விளைவுகளைத் தடுக்கும். எனினும், இது காச நோய் வராமல் இருப்பதற்கான தடுப்பூசி இல்லை. எனவே, காசநோய் அல்லது அதற்கான அறிகுறி இருக்குமாயின் தாய் முகக் கவசம் அணிந்தே பிள்ளைகளுக்கு பால் கொடுக்க வேண்டும்.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மார்பு நோய் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இந்தச் சிகிச்சை நிலையங்கள் விசேடமாக காசநோயை கண்டு பிடிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. இவை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்தே உள்ளன. இலங்கையில் காசநோயை கட்டுப்படுத்துவற்கான செயற்றிட்டம் அமைச்சில் உள்ளது. அதன்


டொக்டர் கே. சந்திரகுமார்

கீழ் இந்தச் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. அவ்வாறான சிகிச்சை நிலையத்திற்கு எவரும் எப்போதும் வரலாம். வவுனியா சிகிச்சை நிலையம் ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும். அத்துடன் வவுனியாவில் உள்ள சிறிய வைத்தியசாலைகளிலும் காச நோய் பரிசோதனைக்காக ஒருவர் தனது சளியை ஒப்படைக்க முடியும்.

ஒருவர் காசநோய் தொடர்பான பரிசோதனைக்கு எந்த வைத்தியரின் சிபாரிசும் இன்றி சிகிச்சை நிலையத்திற்கு வரலாம். அங்கு நீங்களாகவே பரிசோதனை கூடத்திற்கு வந்து பரிசோதனை செய்யும் வசதி கூட உள்ளது.

**கேள்வி: காச நோய் உள்ளவர்கள் தனிமையில் தங்கி இருந்து சிகிச்சை பெற வேண்டும் என்ற அச்சம் காணப்படுகின்றது. வவுனியாவிலும் செட்டிகுளம் வைத்தியசாலையை கூறுகின்றனர்?**

பதில்: செட்டிகுளம் வைத்தியசாலையில் காச நோய்க்காக தனியான விடுதி உள்ளது. அதன் நோக்கம், காசநோய் கடுமையாக உள்ளவர்கள் விடுதியில் தங்க வைத்து பராமரிக்க வேண்டும் என்பதால் இந்த விடுதியை பயன்படுத்துகின்றோம்.


அவர்களை சாதாரண விடுதியில் வைத்திருந்தால் அவர்களால் ஏனையோருக்கும் காசநோய் பரவும். எனவே தான் செட்டிகுளத்தில் இந்த வசதி செய்யப்பட்டுள்ளதே தவிர அவர்களை தனிமைப்படுத்துவதற்கான வைத்தியசாலை இல்லை. காச நோய் உள்ளவர்களுக்கு முதல் இரண்டு கிழமைக்கு நேரடி கண்காணிப்பு சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பதால் அவர்கள் மருத்துவரது கண்காணிப்பில் மருந்துகளை பருக வேண்டும். அவ்வாறு மருந்துகளை பெறாதவர்களையும் வைத்தியசாலையில் தங்க வைத்து பராமரிக்கின்றோம்.

**கேள்வி: காச நோய்க்கான மருந்துகளால் வேறு பாதிப்புகள் ஏற்படுமா?**

பதில்: காச நோய்க்கான மருந்துகளால் சிறுநீரக நோய் வருமா என்ற பயம் பலருக்கும் உள்ளது. எனினும் அவ்வாறு எந்த பிரச்சினையும் இல்லை.

**கேள்வி: கொரோனாவுக்கும் காசநோய்க்குமான வித்தியாசமும் ஒற்றுமையும்?**

பதில்: கொறொனா ஒரு வைரஸ் நோய்; மருந்து இல்லை; தடுப்பூசி இருக்கிறது. காச நோய் ஒரு பற்றீரியா நோய். மருந்து உள்ளது; தடுப்பூசி இல்லை. எனினும் இரண்டுக்கும் இருமலும் சுவாசப்பை பாதிப்பே ஒற்றுமையாகப் பார்க்கலாம்.



உலக நீர் தினம்:

# கண்ணுக்கு தெரியாததை காணுதல்





**ஏ.எம். ஆஜாத்கான்**

உலகில் உயிர்கள் நிலைத்திருப்பதற்கு அத்தியாவசியமான ஒன்றாக நீர் விளங்குகின்றது. புவியிலுள்ள ஏரிகள், கடல்கள், குளங்கள் அனைத்துமே நீரால் சூழப்பட்டனவாகும். மேலும், உலகில் காணப்படும் உயிரினங்கள் அனைத்திலும் நீர் காணப்படுகிறது. உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத ஒரு வளமாக நீர்வளம் காணப்படுகிறது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நீர் வளமானது, பல்வேறு காரணங்களால் இன்று மாசடைந்தும் அருகியும் வருகின்றது. இதைத் தடுப்பதற்காகவும் நீர்வளத்தைப் பாதுக்காக்கவும் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்துக்கு அமைய ஆண்டு தோறும் மார்ச் 22 ஆம் நாள், உலக நீர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1992 ஆம் ஆண்டில் பிரேஸிலில் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை பேரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்ட 21 ஆம் நூற்றாண்டின் செயற்றிட்டத்தின் படி, 1993 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டின் மார்ச் 22 ஆம் திகதி, உலக நீர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன்படி ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட ஒரு கருப்பொருளை அடிப்படையாக கொண்டு, உலக நீர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடம் (2022) உலக நீர் தினத்தின் கருப்பொருள், 'நிலத்தடி நீர் - கண்ணுக்குத் தெரியாததைக் காணக்கூடியதாக ஆக்குதல்' ஆகும். இது சர்வதேச நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு மையத்தால் முன்வைக்கப்பட்டது.

நிலத்தடி நீர் கண்ணுக்கு தெரியாதது; ஆனால் அதன் தாக்கம் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. கண்ணுக்குத் தெரியாமல், நம் காலடியில் காணப்படும் நிலத்தடி நீர், நம் வாழ்க்கையை வளமாக்கும் புதையல். உலகில் உள்ள அனைத்து திரவ நன்னீரும் நிலத்தடி நீராகும்.

காலநிலை மாற்றம் மோசமாகும் போது, நிலத்தடி நீர் மேலும் மேலும் முக்கியமானதாக மாறும். இந்த விலைமதிப்பற்ற வளத்தை நிலையான முறையில் நிர்வகிக்க நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நிலத்தடி நீர் என்பது புவி மேற்பரப்புக்கு கீழே காணப்படும் நீர் அனைத்தும் நிலத்தடி நீர் எனப்படும். மழைவீழ்ச்சி அல்லது மேற்பரப்பு நீர் நிலைகளில் இருந்து பெறப்படும் நீரானது படிப்படியாக தரைக்குள்ளே வடிந்து சென்றவுடன் மண் படைகளில் தங்கி விடுகின்றது. இவ்வாறு ஊடுபரவல் மூலம் பெறப்படும் நீரானது உட்புகவிடும் பாறை அமைப்புகளில் காணப்படுவதுடன் அவை நீர்தாங்குபடுக்கை என அழைக்கப்படும்.

மழைவீழ்ச்சி, அருகிலுள்ள நீர் நிலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நீர், மண்ணின் உட்புகவிடும் தன்மை ஆகியவற்றில் இந்நீர் தங்கியுள்ளது. அத்துடன் மிக ஆழத்தில் உட்புகவிடாத பாறைப்படைகளிலும் நிரந்தரமான நீர்தாங்கு படுக்கைகளிலும் காணப்படுகின்றன. இவ்விரு நீர் அமைப்புகளும் நிலத்தடி நீர் என அழைக்கப்படுகிறன.

நீர் வளங்களில், நிலத்தடி நீர் வளமானது முக்கியமான நீராதாரமாகும். உலகெங்கிலும் உள்ள அனைத்து குடி நீரில் பாதியையும் பாசன விவசாயத்துக்கு 40% தண்ணீரையும், கைத்தொழிலுக்கு 1/3 பங்கு தண்ணீரையும் நிலத்தடி நீர் வழங்குகின்றது.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த நிலத்தடி நீரை நாம் பாதுகாக்க தவறினால், எதிர்காலத்தில் நாம் நீருக்காக பல்வேறு சிரமங்களை அனுபவிக்க நேரிடும். பல ஆண்டுகளின் கணக்கெடுப்பின் படி, கணிசமான அளவு நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும், வரும் காலங்களில் மேலும் குறைவதற்கான வாய்ப்புகளும் உள்ளதாக கூறப்படுகிறது. போதுமான அளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றாலும் நீர்நிலைகளில் மழை நீரானது தேங்காமல், அதிகளவு கடலில் கலக்கின்றமையாலும், நீரை அடிப்படையாக கொண்ட தொழிற்சாலைகளின் அதிகரிப்பு, காடழிப்பு செயன்முறை போன்றன நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்கின்றன. மேலும் பொலீத்தீன் பொருட்கள் நிலத்தில் படையாக புதைக்கப்படுதல், நீர்நிலைகள் சரிவர ஆழமாக்கப்படாமை காரணமாக கொள்ளளவு நீர்ப்பிடிப்பு பகுதி கணிசமாக குறைந்துள்ளது. இதனால் பூமிக்குள் உட்புகும் நீரின் அளவும் குறைந்து வருகின்றது.

பூமியில் 29.9 % சதவீத நன்னீர் நிலத்தடி நன்னீராக உள்ளது. பூமியில் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள மொத்த நன்னீரில் வெறும் 0.26 % சதவீத நன்னீர் மட்டுமே ஏரிகள், நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மூலமாக அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் நீர் சுற்றுச்சூழலைப் பராமரிக்கவும் நம்மால் பயன்படுத்தப்படுகிறது.

புவியின் மேற்பரப்பில் காணப்படும் நீரை விட, நிலத்தடி நீர் மலிவானது; மேலும் அதிக அளவில் மாசுபடாதது. எனவே பொது மக்களின் உபயோகத்திற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும் சில மனித நடவடிக்கைகள் காரணமாகவும், இயற்கை நிலைகளின் காரணமாகவும் நிலத்தடி நீரானது மாசுபடுத்தப்படுகின்றது. அதாவது, தொழிற்சாலை கழிவுகள் நிலத்தடி நீரில் கலத்தல், செயற்கை உரங்கள் பூச்சி கொல்லிகளை விவசாய நடவடிக்கையில் பயன்படுத்தல், குப்பைத்தொட்டிகளில் இருந்து கசிவு போன்ற காரணங்களால் நச்சுத்தன்மையுள்ள நீராக நிலத்தடி நீர்வளம் மாறுகின்றது.

இதன் மூலம் இந் நீரை பயன்படுத்தும் மக்களிடையே பல்வேறு நோய்கள் ஏற்படவும் அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. நிலத்தடி நீர் வளம் மாசடையும் போது அதனை நம்பியுள்ள விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்றன பாதிப்படைவததோடு கிராமங்கள், சிறு நகரங்களில் குடியிருக்கும் மக்கள் தங்களது குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பல இன்னல்களை எதிர் நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும். மேலும் நிலத்தடி நீர் வளம் அருகும் பட்சத்தில் நிலத்தடி நீரை நம்பியிருக்கும் மக்கள் தங்களது குடியிருப்புக்களை காலி செய்யவேண்டிய நிலைமையும் உருவாகலாம்.

இவ்வளவு முக்கியத்துவம் கொண்ட நிலத்தடி நீரின் வரவை அதிகப்படுத்தும் முறைகளில் நாம் கவனம் செலுத்துவோமானால் அதாவது நிலங்களை உழுது வைப்பதன் மூலம் மழை பெய்யும் போது நிலம் மழை நீரை உறிஞ்சிக்கொள்ளும்.

இவ்வாறு உறிஞ்சப்படும் நீரானது சிறிது சிறிதாக நிலத்தின் அடிமட்டத்துக்குச் சென்று நிலத்தடி நீராக சேரும். இது ஒரு நிலத்தடி நீரை சேமிக்கும் முறையாகும்.

மேலும் பயிர் நிலங்களில் சமச்சீர் வரப்புகள் அமைப்பதன் மூலமாக சாய்வாக காணப்படும் நிலங்களில் விழும் மழைநீரானது நிற்காமல் ஓடி வடிநீர் ஓடைகளில் சேர்ந்துவிடுவததைக் கட்டுப்படுத்த சமச்சீர் வரப்புகள் பெரிதும் உதவுகிறன. அதாவது சாய்வு நிலத்தில் விழும் நீரானது இலகுவில் வழிந்தோடி விடாமல் நிலத்தின் அடியில் சேமிக்கப்படும்.

ஏரி குளங்களை பராமரித்தல், வீடுகளில் மழை நீரை சேமித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது நீர் வளத்தை நாம் பாதுகாக்க முடியும்.

இவ்வகையில் உயிரின் நிலைத்திருப்பிற்கு அவசியமான நீர்வளத்தை பாதுகாப்பது ஒவ்வொரு தனிமனிதனினதும் கடமையாகும். மேலும் எதிர்கால சந்ததியினரின் நிலைத்திருப்பிற்கு நீர் இன்றியமையாத வளம் என்பதை அனைவரும் கவனத்தில் எடுத்து நீர்வளத்தை பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.



# நடு மண்டையில் நச்சென அடிக்கும் விலைவாசி

என்னதான் நன்றாகப் பழகியிருந்தாலும், முதுகுக்குப் பின்னால் இருந்துகொண்டு, பிடரியில் தட்டினால் சிலர் திருப்பி அடித்துவிடுவர். அந்தளவுக்கு கோபம், தலைக்கேறி இருக்கும். சில விடயங்களைக் கேட்டாலே சிலர், தலைசுற்றி கீழே விழுந்துவிடுவர். ஆனால், பொருட்களின் விலைகள் ஒவ்வொருவரையும் தலைசுற்ற வைத்துள்ளன.

நாளொன்றுக்கு மூவேளையும் ஒன்றுமே இல்லாமல் பட்டினி கிடந்து சமாளித்துக்கொள்வோரும் உள்ளனர். நன்றாக மூக்குமுட்ட சாப்பிட்டுவிட்டு, மற்றையவர்களிடம் வம்புக்குச் செல்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். மூவேளையில் ஒருவேளை அல்லது இரண்டு வேளைகள் உண்போரும் இருக்கின்றனர்.

இருப்பவர்களை விடவும் இல்லாதவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. வரிசைகள் நீண்டுகொண்டே செல்வதைப் போல, நாளொன்றுக்கு சாப்பிடாதவர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே போகின்றது. ஆகையால், கிடைக்கும் உணவுகளை வீணாக்காமல் பிரயோசனப்படுத்த வேண்டும்.

கையேந்துவோர், கடைகளை உடைத்து திருடுவோர், முடிச்சிமாறிகள் அதிகரித்துள்ளனர். இவற்றுக்கெல்லாம் இல்லாமையே காரணமாகும். அத்துடன், நாட்கூலிகளும் கிடைப்பதில்லை, அன்றாட தேவைக்காக, சிலர் அச்சமின்றி திருடத்தொடங்கிவிட்டனர். அவர்கள் பயிற்சி பெறுவதற்கு மின்வெட்டும் சாதகமாகிவிடுகின்றது.

இந்நிலையில்தான், சிவப்பு பச்சை, வெள்ளைப் பச்சை அரிசி, சீனி ஒரு கிலோ கிராம் ரூ.190, ஒரு கிலோ கிராம் பயறு ரூ.905, பருப்பு ரூ.390, முட்டை ஒன்று 32 ரூபாய் என்றவகையில் அதிகரித்துள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் 30 சதவீதத்துக்கும் 40 சதவீதத்துக்கும் அதிகரிக்குமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அப்படியாயின், அடுத்தடுத்த மாதங்களில் ஒவ்வொரு நாளும் திண்டாடவேண்டிய நிலைமையே ஏற்படும். மின்சாரம், தண்ணீர் கட்டணமும் அதிகரிக்குமென ஆரூடம் கூறியுள்ளனர். அதிகரிப்பெல்லாம் அப்பாவி மக்களின் முதுகுகளிலேயே சுமத்தப்படும்.

சிங்கள- தமிழ் புத்தாண்டுக்கு நிவாரணம் கிடைக்குமென்ற செய்தியால், சிலர் சமாளித்துக்கொண்டு இருக்கின்றனர். தற்போதைய சுமை, புத்தாண்டுக்குப் பின்னர் பன்மடங்காக அதிகரிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை. வரிசைகளும் நீண்டுக்கொண்டே செல்லும், சட்டவிரோத செயற்பாடுகளும் கூடும்.

ஓட்டோவை செலுத்தி குடும்பத்தை காப்பாற்றும் பெண்ணொருவர், தன்னுடைய பிள்ளையை ஓட்டோவின் பின்னிருக்கைக்கு மேலே படுக்கவைத்துக்கொண்டு, இரண்டு நாள்களாக சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்ள வீதி, வீதியாக அலைந்து திரிந்துள்ளார்.

பாய்களைக் கொண்டுப்போய், சிலிண்டர்களுக்கு நேரெதிரே விடியவிடிய, படுத்துகிடக்கின்றனர். எதற்கெடுத்தாலும், எங்கும் வரிசைகளைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இந்நிலையில்தான், நாளொன்றுக்கு 10 மணிநேரம் மின்வெட்டு அமல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது, சுமையை இன்னும் அதிகரிக்குமே தவிர குறைக்காது.

வாரத்தில் சில நாள்கள் மட்டுமே வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்கள், இழுத்து மூடவேண்டிய நிலைமை ஏற்படும். அதனால், சாதாரண பொதுமக்களின் சிரமம், பன்மடங்கால் அதிகரிக்கும். இவற்றையெல்லாம் சமாளிப்பதற்காக. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையேனும் ஓரளவுக்கு குறைப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்பதே எமது யோசனையாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

நாஸ்தீகர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். இவர்கள் வெளியில் எப்படிப் பேசினாலும், நடைமுறையில் பலருடைய நடவடிக்கைகள் மூட நம்பிக்கை நிறைந்ததாகவே இருக்கும். அவர்கள் அதில் இருந்து விலகுவதில்லை.

நாஸ்தீகர்களில் நல்ல சிந்தனையாளர்கள் இருக்கிறார்கள். கடவுள் கொள்கையில் மாறுபாடாக இருந்தாலும், சமூக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளவர்கள்; தீர்கமான சிந்தனை படைத்தவர்கள்.

ஆனால், சொல்லில் ஒருவிதமாகவும் செயலில் மாறுபாடாகவும் வாழ்பவர்கள் உண்டு. இடதுசாரிக் கொள்கையைப் பேசுபவர்களில் பலர், இடதுசாரிகள் போல் வாழ்வதுமில்ல; சிந்திப்பதும் இல்லை.

மேல்நாடுகளைத் தூற்றித்திரியும் பலர், தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுகின்றார்கள். ஆனாலும் அதே நாடுகளைத் தூற்றிக் கொண்டே இருப்பார்கள். முதலாளித்துவம் பற்றி விமர்சிப்பவர்கள், அவர்களை விட வசதியாக வாழ்வார்கள்.

தங்களை முற்போக்குவாதிகள் எனச் சொல்லிக் கொள்பவர்கள், எல்லோரும் முற்போக்குவாதிகள் அல்லர். மிகவும் கீழ்த்தரமான பிற்போக்குவாதிகளாக வாழ்கிறார்கள். உலகை நேசித்து, மக்களோடு மக்களாக, தனது நாட்டை விட்டுக்கொடுக்காமல் வாழ்பவரே உண்மையான பிரஜை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிபர் வெற்றிடங்களை நிரப்பக் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் தரம் இரண்டு வகையைச் சேர்ந்த 45 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டு, ஒரு வருடமாகியும் இதுவரை நேர்முக பரீட்சை நடத்தப்படாது காலம் கடத்தப்பட்டு வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் திருமலை, மூதூர், திருமலை வடக்கு, கிண்ணியா ஆகிய கல்வி வலயங்களில் 17 பாடசாலைகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு, மட்டு. மேற்கு, மட்டு. மத்தி ஆகிய வலயங்களில் 16 பாடசாலைகளிலும் கல்முனை கல்வி மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் ஆகிய கல்வி வலயங்களில் எட்டு பாடசாலைகளிலும் அம்பாறை வலயத்தில் நான்கு பாடசாலைகளிலும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுகிறன.

இப்பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு உரியதாகும். அதன் அடிப்படையிலேயே விண்ணப்பம் கோரப்பட்டது. பல தடவைகள் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், அரசியல் ரீதியான அழுத்தங்களை பிரயோகித்து நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

எனவே, அரசியல் அழுத்தங்களுக்கு அப்பால் இப்பாடசாலைகளின் சுயாதீனத்தை பாதுகாக்க மாகாண ஆளுநர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் போன்றோர் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்கிழக்கு கல்விப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

அஸ்லம்

# அபிவிருத்தித் திட்டங்கள் மீதான எதிர்ப்புகள்

லக்ஸ்மன்

நிலைபேறான அபிவிருத்திகள் தொடர்பான தூரநோக்குச் சிந்தனையானது பல்வேறு நெருக்கடிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த கால கசப்புகள், மறக்க முடியா அனுபவங்களின் காரணமாக அனேகமான அபிவிருத்தி முயற்சிகள் பெரும் எதிர்ப்புகளையே கொண்டுவருகின்றன. அதற்கு மக்கள் மாத்திரமல்ல அவர்களின் வாழ்க்கை முறைகளும், அரசியல் தரப்புகளும் காரணமாக இருந்து விடுகின்றன.

அபிவிருத்தி என்பது உலகளாவிய ரீதியில் 2030இல் நிலையான அபிவிருத்தி இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதனை அடைவதற்கு அனைவரினதும் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் இதுசார்ந்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இதில், சமூக, பொருளாதார வழிமுறைகள் பற்றி முக்கியப்படுத்திக் குறிப்பிடுகிறது. சமூக அபிவிருத்தி இலக்குகளை அடைதல் உலகலாவிய ரீதியில், தேசிய, உள்ளூராட்சி மற்றும் சமூக மட்டங்களில் எல்லோரினதும் வினைத்திறனான அர்ப்பணிப்புடனான பங்களிப்பில்லாமல் சாத்தியமாகாது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

வறுமையொழிப்பு, பட்டினியின்மை, சுகாதார மற்றும் ஆரோக்கியமான வாழ்வு, தரமான கல்வி, பெண்களின் சமூக வகிபாகம், தூய்மையான நீர், பொருத்தமான சக்தி வலு, கௌரவமான தொழிலும் பொருளாதாரமும், தொழில்துறை, புத்தாக்கம், உட்கட்டமைப்பு, ஏற்றத்தாழ்வுகளற்ற நிலை, நிலையான நகரங்களும் சமூகங்களும் பொறுப்புமிக்க நுகர்வும் உற்பத்தியும் காலநிலை மாற்ற பாதிப்புகளை குறைப்பதற்கான செயற்பாடுகள், நீர் வாழ் உயிரினங்கள், புவி மேல் காணப்படும் வளங்கள், சமாதான, நீதியான சூழலும் உறுதியான நிறுவனங்களும் என்று நீண்டதொரு பட்டியல் இந்த நிலைபேறான அபிவிருத்திப்பார்வையில் கவனத்திலெடுக்கப்படுகின்றன. இது ஒரு நாட்டுக்கோ நம்முடைய நாட்டுக்கோ மாத்திரமானதல்ல என்பது முக்கியமானது.

இருந்தாலும் இலங்கையில் அரசியல் முதல் அடிமட்டம் வரையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது இதற்கு முக்கியமானதாகும். அபிவிருத்தி என்றாலே அது அரசியல்வாதிகளின் கைகளுக்கும் அரசியல்வாதிகளாலும் மாத்திரம்தான் என்ற முதல் கட்டத்திலேயே இலங்கையின் அபிவிருத்தி வீழ்ச்சி என்ற நிலைப்பாடு ஏற்பட்டு விடுகிறது.

எந்தவோர் அபிவிருத்தியை எடுத்துக் கொண்டாலும் அது அரசியல்வாதிகளாலும், அரசியல்வாதிகளின் சகபாடிகளாலுமே மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது, அரசியல்வாதிக்கான பங்கு, சகபாடிகளுக்கான பங்கு, மேலும் பலருக்கான பங்கு என்று பிரித்தெடுப்பதிலேயே அபிவிருத்திகள் நொந்துபோகின்றன. அது ஒரு மாபியாத் தனம் என்ற விடயத்தினையே நினைவுபடுத்தும்.

இந்த நிலையில், நாள்தோறும் அதிகரித்து செல்கின்ற இலங்கையிலுள்ள இன, மத, பிரதேச, அரசியல் ரீதியான பிரச்சினைகள் முதலில் இந்த நிலைபேறான அபிவிருத்தியில் தடையை ஏற்படுத்திவிடுகின்றன.

இலங்கையானது வளர்ச்சியடைந்த நாடோ வசதி படைத்த நாடோ அல்ல. ஒரு வளர்முக நாடு, அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்று சொல்லிக் கொள்கிறோம். அது எந்தளவுக்குப் பொருந்தும் என்ற கோள்வியை மறுபுறம் ஒதுக்கி வைத்துவிடுவோம். அந்தவகையில் சமூக, பொருளாதார அபிவிருத்தி விடயங்களுக்கப்பால், இன, மத, பிரதேசங்களுக்கிடையிலான அரசியல், கலாசார, மத ரீதியான பிரிவினைகள் முதலில் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. அதற்கு முதலில் இலங்கையானது தீர்வுகளைக் கண்டாகவேண்டும்.

இலங்கையின் இன ரீதியான முரண்பாடு என்ற உடனேயே தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை முதலில் வந்து நின்றுவிடுகிறது. உண்மையில் இலங்கையின் அனைத்து விதமான அபிவிருத்திக்கும் பங்களிப்புகளைச் செய்யக்கூடியவர்கள் தமிழ் மக்களே. இவர்களின் புலம்பெயர் தரப்பினர் நாட்டை பொன் விளையும் நாடாக மாற்றுமளவிற்கு பொருளாதார, கல்வி அறிவு, அனுபவரீதியான அறிவு என வளமுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆனால் ஸ்திரமில்லாத தமிழர்களுக்குரிய சரியான அங்கிகாரமான தீர்வில்லாது அவர்கள் இலங்கைக்குள் முதலிடவோ வேறு நகர்வுகளை முன்னெடுக்கவோ விருப்பம் கொள்ளமாட்டார்கள். இவர்களை இலங்கைக்குள் அழைக்க சரியான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவர்களை உள்ளே இழுத்துக் கொள்வதற்கு தற்போதைய ஜனாதிபதி பல முயற்சிகளை மேற்கொள்கிறார். அதற்கு அவர் நியூயோர்க் சென்றவேளை பேசியதும், நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டு முக்கியஸ்தர்களிடம் முன்வைக்கின்ற வேண்டுகோள்களும் நல்ல சாட்சியே. இருந்தாலும் உள்ளே இருப்பவர்களை விடுத்து, நேரடியாக அது சாத்தியமே இல்லை என்பதனை அவர்புரிந்து கொள்வது அவசியம். அதே நேரம், தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது அதிலும் முக்கியம். அந்த வகையில்தான், தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைத்துத் தரப்பினரையும் தனித்தனியே கையாளுதல் இலங்கை நாட்டுக்கு முக்கியமானதாகும். தீர்வுகள் கட்டாயமாகக் காணப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனாலும், பிரச்சினையான ஒரு தரப்பினை மற்றைய தரப்பு வீழ்த்திவிட வேண்டும் என்கின்ற மனோநிலையில் இருந்து அதனைச் சரியாகப் பாதகமின்றித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற மனோநிலை இந்த இடத்தில் முக்கியம் பெறும்.

நாட்டில் 3 தசாப்தத்துக்கும் மேலாக நீடித்த ஆயுத யுத்தம் 2009ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தபின்னர், நாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் அதிகமானவை வீதி அமைப்புகளே. அதில் நடந்த ஊழல்கள் வெளிப்படையாகத் தெரியாதவை. இருந்தாலும் அவை யாவும் தெற்குக்கும் வடக்கு கிழக்குக்குமான பெரும்பான்மை மக்களின் தொடர்புகளை, போக்குவரத்தினை இலகுபடுத்தியது. இவ்வாறுதான் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் பார்க்கின்றனர். ஆனாலும் முழு நாட்டுக்குமானதாகவே அத்திட்டங்கள் அமைந்திருந்தன.

ஆனால், இவ்வாறான பல பாரிய அபிவிருத்தி திட்டங்கள் பாரிய கடன் சுமையை நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விட்டன. அவை இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. அந்தவகையில், யுத்தத்திற்கு பின்னரான பல கோடிசெலவிலான அபிவிருத்தி செயற்பாடுகள் உரிய இலக்கை அடைய தவறியிருக்கின்றன என்ற கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன.

இருந்தாலும், தற்போதைய அரசாங்கம் அவ்வாறான நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளை எடுக்கின்றதா என்ற கேள்வி இந்த இடத்தில் தோன்றுகிறது. யுத்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து யாரும் பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. அது நிறைவுக்கு வந்தபின்னரும் கூட தமிழ் இன மக்களை, அடிமைத்தனமாக பெரும்பான்மையின ஆதிக்க சிந்தனையுடன் கையாள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் ஒன்றுதான் தமிழர்களுடைய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொல்பொருள் நடவடிக்கை என்று சொல்லாம்.

நாட்டில் காணப்படும் அரசியல் இஸ்திரமயற்ற நிலை, பல வருடங்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் அனைத்து இனங்களுக்குமான அரசியல் தீர்வுப்பிரச்சினை, அடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் மனித உரிமை மீறல்கள், மிக அண்மைக்காலமாக உக்கிரமடைந்துவரும் இன, மத ரீதியான முரண்பாடுகள் அபிவிருத்தி முயற்சியில் முக்கிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதனை யாரும் மறுப்பதற்கில்லை.

ஐக்கிய நாடுகள் சபை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைத் தீர்மானித்து பல வருடங்கள் கடந்துவிட்டது. ஆனால் நாம் அதனை அடைவதற்கான ஒருமிப்பில் இருக்கிறோமா என்றால் பதில் இல்லை என்பதாகவே இருக்கும். இவ்விலக்குகளையடையும் நோக்கில் உலகின் அனைத்து நாடுகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் இலங்கை எந்த நிலையில் இருக்கிறது என்பதனை நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த இடத்தில்தான், பிராந்தியங்களில் முன்னெடுப்பதற்கெனத் திட்டமிடப்படும் அபிவிருத்தித்திட்டங்களை ஏன் மக்கள் எதிர்க்கின்றனர் என்கின்ற விடயம் முக்கியம் பெறுகின்றது. சரியான வகையில் மக்களை வழிப்படுத்துவதற்கான வழிமுறைகள் இதில் தேவையாக இருக்கின்றன. மக்களைச் சரியான முறையில் உள்வாங்கிக் கொள்ளல் அவர்களுக்கான தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளல் என்பன முக்கியமானவை.

கடந்த கால அனுபவங்கள் மக்களை எது ஒன்று நடைபெற்றாலும், ஆரம்பிக்கப்பட்டாலும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலைமையை உருவாக்கிவிட்டது என்று சொல்வதற்கு நாம் வெட்கப்படத் தேவையில்லை. ஆனால் அதற்கான தீர்வுகள் என்ன என்பதுதான் கண்டறியப்பட வேண்டும்.

அந்த வகையில்தான், தேசிய, பிராந்திய அரசியல், சமூக தலைமைகளும், இவ்விலக்குகள் தொடர்பான தெளிவைப் பெறுவதும், வளங்களையும் வாய்ப்புகளையும் தமது சமூகங்களுக்கும் பிரதேசங்களுக்குமாக எவ்வாறு சரியாக கையாள்வது என்பது தொடர்பிலான தெளிவுகளுக்குள் வரும்வரையில் அபிவிருத்திகள் பிரச்சினைகளே.

இவற்றுக்கான தீர்வுகளாக, ஒவ்வொரு இனத்துக்கும், சமூகத்துக்கும் சமய, அரசியல், கலாசார இருப்பு, உரிமைகள் மற்றும் அபிவிருத்தி இலக்குகள் இருக்கின்றன என்பதனை ஏற்றுக் கொண்டு, முன்னுரிமைப்படுத்தி அவற்றிற்கான திட்டங்களையும் செயற்பாடுகளையும் ஆரம்பித்தல் நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு முதல் படியாக இருக்கும். என்றாலும், நாட்டுக்குள் இருக்கின்ற ஆரம்பப் பிரச்சினைகளைத் தீர்க்காத வரையில் எதிலுமே ஆரம்பப்புள்ளியைக்கூட எட்டமுடியாது என்பது மட்டும் உண்மை.

எமது முயற்சிகள் சரியான விளைவுகளைக் கொடுக்க வேண்டுமாக இருந்தால், எம்மை மறுபரிசீலனை செய்து அரசியலுக்குமப்பால், மறுசீரமைக்க வேண்டியதே காலத்தின் கட்டாயம்.



# மின் பொறிக்குள் சம்பூர்



அ. அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டது சம்பூர் பிரதேசம். மூதூர் நகரிலிருந்து 06 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சம்பூர் 35.9 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

சம்பூரின் வடக்கில் பரந்த வில்லுக்குளமும் கிழக்கில் இளக்கந்தை கிராமமும் தெற்கில் கடற்கரைச்சேனை கிராமமும் மேற்கில் கொட்டியாரக்குடா கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

சம்பூரின் பக்கத்து கிராமங்களாக கூனித்தீவு, நவரெட்ணபுரம், சூடைக்குடா, இளக்கந்தை, சந்தோசபுரம், சம்புக்களி, கடற்கரைச்சேனை முதலான கிராமங்களும் அயல் பிரதேச கிராமங்களாக சேனையூர், கட்டைபறிச்சான், சாலையூர், பாட்டாளிபுரம், வீரமாநகர், நீலாக்கேணி, மலைமுந்தல், நல்லூர், இத்திக்குளம், தங்கபுரம், அம்மன்நகர், கணேசபுரம், சந்தனவட்டை, பள்ளிக்குடியிருப்பு முதலான கிராமங்களும் உள்ளன.

இயற்கையாகவே சம்பூரில் நிலவளமும் நீர்வளமும் வனவளமும் மலைவளமும் கடல் வளமும் அமைந்து சம்பூருக்கு சிறப்பையும் அழகையும் கொடுக்கின்றன. குடியிருப்பு காணிகள், வயல் நிலங்கள், தோட்ட நிலங்கள், குடிமனைகள், கட்டடங்கள், கிணறுகள் மக்கள் உரிமங்களாகும். கோவில்கள், அரச கட்டடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலை, பொது இடங்கள், மயானங்கள், வீதிகள் என்பன ஊரின் உரிமங்களாகும். இந்த உரிமங்கள் சம்பூர் தமிழ் மக்களின் தனித்துவமான சிறப்பான வாழ்வுக்கு வழி செய்கின்றன.

## பூர்வீக வரலாறு

சம்பூர் காலத்தால் முற்பட்ட, பூர்வீக புராதன பிரதேசமாகும். நீண்ட தொன்மை மிகு வரலாற்றுப் பெருமையுடைய கோணேசர் கோவிலை செப்பனிட்டு, கோணேசர் கோவில் திருப்பணிகள் செய்து, கந்தளாய் குளம் கட்டி, வளம் பெருக்கி திருகோணமலை மண்ணில் தமிழ் மக்களை குடியமர்த்தி, அம்மக்களை வாழ வைத்து, மக்கள் பணியாலும் கடமைகளாலும் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானையை சிறப்புறத் திகழவைத்த குளக்கோட்டு மன்னனின் திருப்பணிகளுடன் தொடர்பு பட்டதாக சம்பூர் வரலாறு விளங்குகின்றது.

குளக்கோட்டு மன்னனின் கால்பட்ட மண் கொண்ட பூமி சம்பூர் எனக் கூறப்படுகின்றது. திருக்கோணேசர் கோவில் திருப்பணிகள் செய்த குளக்கோட்டன் இக்கோவில் காலம் எல்லாம் சிறப்புடன் திகழ இக்கோவில் இறைவனுக்கும் கோவிலுக்கும் தொழும்பு செய்ய தென்னிந்திய தமிழ் நாட்டிலிருந்து தானத்தார், வரிப்பத்தார் என்னும் தமிழ் மக்கள் பிரிவினரையும் கனக சுந்தரப் பெருமாளையும் புலவரையும் தனியுண்ணா பூபால வன்னியனையும் வேறு பல குடி மக்களையும் திருகோணமலைக்கு அழைத்து வந்து, வாழ வளமான வாழ்விடம் கொடுத்து, வாழ







வைத்தான் என்பதை, கவிராசர் என்பார் பாட்டாலும் உரையாலும் இயற்றிய கோணேசர் கல்வெட்டு என்னும் கோணேசர் சாசனத்தின் மூலம் அறிய முடிகிறது.

குளக்கோட்ட மன்னன் தென்னிந்திய தமிழ் நாட்டிலிருந்து திருகோணமலைக்கு திருக்கோணேசர் தொழும்பிற்கு அழைத்து வந்த தமிழ் மக்கள் தொகையினருள் ஒரு கூட்டத்தினரை அழைத்துச் சென்று குடியமர்த்திய சகல வளமும் கொண்ட சம்பூரணமான இடமே சம்பூர் ஆகும்.

இற்றைக்கு 560 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கவிராசர் என்பார், தாமியற்றிய கோணேசர் கல்வெட்டு என வழங்கும் கோணேசர் சாசனத்தில் குளக்கோட்டன் காலம் கலியுகம் பிறந்து 512 ஆண்டுகள் சென்ற பின்னர் என்று கூறியுள்ளார்.

ஆகவே குளக்கோட்டன் காலம் கி.மு 2,588 என்று கொள்ளலாம் என 1963 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட திருக்கோணேஸ்வரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நோக்கும் போது, சம்பூர் வரலாறும் வாழ்வும் சுமார் 4,600 ஆண்டுகள் காலத்தை கொண்டதாக இருக்கவேண்டும். ஆனால், குளக்கோட்டன் மன்னனால் சம்பூரில் மக்கள் குடியமர்த்தப் படுவதற்கு முன்னர் சம்பூரில் திராவிட இன மக்கள் வாழ்ந்ததாக அகழ்வுச் சான்றுகளும், செவிவழித் தகவல்களும் குறிப்பிடுகின்றன.

## இளக்கந்தைக் குளம்

சம்பூர் பகுதியில் உள்ள பெரிய நீர்ப்பாசனக் குளம் இளக்கந்தை குளம். கோடையிலும் கடும் வரட்சியிலும் கூட இக் குளம் வற்றுவதில்லை. மாரியிலும் கோடையிலும் பெரும் போக, சிறு போக நெற்செய்கையினை மேற்கொள்ள இக் குளம் பெரிதும் உதவுகின்றது. இக் குளத்து நீர் மூலம் சுமார் 265 ஏக்கர் வயல் நிலத்தில் நெற் செய்கை பண்ண முடியும். சம்பூர் மக்களுக்கு இளக்கந்தை குளத்து நீர் பாயும் வயல் நிலம் மிக அதிகளவில் உள்ளன. இதனால் சம்பூர் பிரதேச மக்களின் வாழ்வும் சிறப்படைகின்றது.

இளக்கந்தை குளத்தின் நீர் மட்ட உயரம் 12 அடிகள்; இக்குளத்தின் நீர் கொள்ளளவு 1,307 மில்லியன் கன மீற்றராகும். இக் குளத்தின் நீர்ப்பாசனப்பகுதி 141, 680 ஹெக்டேயர் ஆகும். இக் குளத்தினுடைய நீரேந்து பகுதி 5, 630 சதுர கிலோ மீற்றராகும்.

## மீண்டும் மின் பொறிக்குள் சம்பூர்

இந்த நிலையில், மீண்டும் மின் பொறிக்குள் சம்பூர் பிரதேசம் தள்ளப்பட்டுள்ளது. சம்பூரில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு உள்ளமையானது எரிசக்தி துறையில் இலங்கை- இந்திய ஒத்துழைப்பு உட்பட பரஸ்பர செழுமைக்கான இந்திய- இலங்கை பொருளாதார கூட்டாண்மைக்கும் வழிவகுக்கும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

சம்பூரில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான கூட்டு முயற்சி பங்குதாரர்கள் உடன் படிக்கை கைசாத்திடப்பட்டுள்ளது. இதையடுத்து, இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இலங்கை மின்சார சபைக்கும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் வெள்ளிக்கிழமை (11-03-2022) இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய எரிசக்தி நிறுவனத்துக்கும் இடையில் 2022 பெப்ரவரி மாதம் ஆரம்பமான நிலையில், இம் மாதம் அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை சம்பூர் மக்களும் பக்கத்து கிராம மக்களும் அயல் பிரதேச மக்களும் விரும்பவில்லை. இதனால் தங்களது வளம் மிக்க காணிகள், மண் வளம், நீர் வளம், குளங்கள், வயல்கள் என அனைத்தும் பாதிப்படையும் எனவும் இழக்க நேரிடும் எனவும் அவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இந்திய- இலங்கை அரசாங்கத்தின் மூலம் சம்பூர் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சூரிய மின் சக்தித் திட்டம் ஊடாக, தமிழ் மக்களின் காணி பறிபோகுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என ரின்கோ சேவ் அமைப்பின் தலைவர் எஸ். எச். கிரிசாந்த குமார் தெரிவித்தார்.

திருகோணமலை ஊடக இல்லத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் பற்றி மேலும் குறிப்பிடுகையில், திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பகுதியில் சம்பூர் கிராமம் அமைந்து உள்ளது. இந்நிலையில் சிறுபான்மை மக்களுடைய காணி அபகரிப்பு, சூரிய மின் சக்தித் திட்டத்துக்காக இடம் பெறக்கூடாது.

2015 ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் அனல் மின் நிலையம் அமைக்க முயற்சிக்கப்பட்டது. அத்திட்டம் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. இவ்வாறான நிலையில், தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் இது போன்ற திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும். சம்பூரில் அன்றாடம் விவசாயத் தொழிலில் ஈடுபடுவோரும் பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர். எனவே தமிழ் மக்களுடைய காணி, இத் திட்டத்தினூடாக அபகரிக்கப்படாது தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதுடன் தமிழ் மக்களுக்கு இவ்விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தவும் வேண்டும்" என்றார்.

இவ் விடயத்தில் இனியாவது இயற்கையை பாதுகாக்கும் தேசிய அமைப்புகள் களத்தில் இறக்குமா?



# வாகரைக்கு வளம் கொடுக்கும் திட்டம்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

மட்டக்களப்பு மாவட்டம், ஐப்பசி தொடக்கம் தை மாதம் வரையிலான காலப்பகுதியில் வடகீழ் பருவப் பெயர்ச்சிக்குரிய காலமாகும். இக்காலத்தில் பெய்யும் மழை நீரை நம்பி, விவசாயிகள் பெரும்போக வேளாண்மைச் செய்கைகளில் ஈடுபடுவர். மேலும், அக்காலத்தில் பெய்யும் மழைநீரை குளங்களில் தேக்கி வைத்து, அடுத்து வருகின்ற ஏப்ரல் தொடக்கம் ஜூலை வரையிலாக காலப்பகுதியில் சிறுபோக வேளாண்மைச் செய்கைக்குப் பயன்படுத்தி வருவது வழக்கமாகவுள்ளது.

ஆனாலும், மாவட்டத்தில் பல குளங்கள் தூர்ந்து போயுள்ளதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக வேளாண்மை மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் ஒரு பகுதியை நிவர்த்தி செய்து, மேலும் சிறுபோக வேளாண்மைச் செய்கையை அதிகரித்து, வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தற்போது வாகரையில் மூன்று குளங்கள் தூர்வாரி புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்காகவேண்டி சர்வதேச நீர் தினத்தன்று (மார்ச் 22) வாகரைப் பகுதியில் புனரமைக்கப்படவுள்ள குளங்களுக்கான ஆரம்ப நிகழ்வு செவ்வாய்கிழமை (22) வாகரை, பனிச்சங்கேணியில் நடைபெற்றது. இத்திட்டம் கொக்ககோலா பவுண்டேனின் ஆறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வீ எபெக்ட் நிறுவனம் மற்றும் அகம் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

"எமது மக்கள் இதுவரை காலமும் பெரும்போக வேளாண்மைச் செய்கையை மாத்திரம் மேற்கொண்டு வருகின்ற இந்நிலையில், எமது பகுதியில் தற்போது மூன்று குளங்களை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் இரண்டு போக வேளாண்மைச் செய்கையை மேற்கொள்ள முடியும் என நாம் எதிர்பார்க்கின்றேன். அத்தோடு வீட்டுத்தோட்டம், மக்களின் சுத்தமான குடிநீர் போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமையும். கால்நடைகளுக்குத் தேவையான நீரையும் இக்குளங்களிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். எனவே இத்திட்டத்தினூடாக எமது பிரதேசம் வளம் பெறும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை" என தாமரை கமநல விவசாய அமைப்பின் செயலாளர் ம. சுலக்‌ஷன் தெரிவிக்கின்றார்.

தற்போது, மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி என அனைத்து விடயங்களிலும், கிழக்கு மாகாணம் குறிப்பிட்டளவு



செல்வாக்குச் செலுத்த வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

வாகரைப் பிரதேசத்தில் 82 குளங்கள் அமைந்துள்ளன. அதில் 40 குளங்கள் பயன்பாட்டிலும், 42 குளங்கள் தூர்ந்துபோயும் உள்ளன. அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் 281இற்கு மேற்பட்ட குளங்கள் தூர்ந்து போகும் நிலையில் உள்ளன. இவ்வாறான குளங்களைப் புனரமைப்பதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலக்கீழ் நீரைச் சேமித்து, நீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யலாம்.

"மட்டக்களப்பு பிரதேசத்தில் தேவையான நிலவளமும், நீர்வளமும் இருக்கின்றன. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் மட்டக்களப்பு மாவட்டம் அதிக விவசாய உற்பத்தியை ஈட்டுவதற்குப் பாடுபடல் வேண்டும். அதற்காக இவ்வாறன திட்டங்களைச் சாதகமாகப் பயன்படுத்தல் வேண்டும்" என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவிக்கின்றார்.

"பாவிக்கின்ற நீரை மீளவும் பெற்றுக் கொடுப்பதற்கும், பெண்களை வலுப்படுத்துவதற்கும், கழிவகற்றல் முகாமைத்துவம் ஆகிய 3 வேறுபட்ட சக்திகளிடமிருந்து ஒரு முழுமையான அபிவிருத்தித் திட்டத்தைக் குறிக்கும் வகையில் எமது செயற்பாடுகள் நகர்கின்றன. கொக்ககோலா பவுண்டேனசன் என்பது கொக்ககோலா நிறுவனத்தின் ஒருபகுதி தொண்டர் அமைப்பாகும். உலகளாவிய ரீதியில் மக்கள் பயன்படுத்தும் நீரில் 100 சதவீதம் அதனைத் திருப்பித்தர நாம் உறுதியளித்துள்ளோம். நாம் அமல்படுத்தம் இத்திட்டத்தினூடாக இப்பகுதியிலுள்ள சமூகத்தின் வாழ்க்கை நிலைமை மேம்படுத்தப்படும். இதனால் 1,700 குடும்பங்கள் பயனடையும். மேலும் விவசாயத்தையும், கால்நடையையும், மேப்படுத்தி பாதுகாப்பான தூயகுடிநீரும் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்கப் பெறவுள்ளது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழவாதாரமும், கழிவு முகமைத்துவமும் மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தினூடாக இப்பகுதி மக்கள் முழுப் பயன்களயும் பெறுவார்கள்" என கொக்கோலா பவுண்டேசனின் இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான பிராந்திய தலைமை அதிகாரி லக்ஸ்மன் மதுரசிங்க, தெரிவிக்கின்றார்.

"மக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்தி தமது சொந்த முயற்சியில் முன்னேற வேண்டும் எனும் நோக்கத்துடன் ஏனையவர்களை நம்பி வாழாமல் சுயபொருளாதாரத்தில் திருப்தியடைந்த மக்களாக மாற்றுவதற்காக முயற்சிகரமான விவசாயக் கொள்கைளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. அதன் ஓர் அங்கம்தான் கிராமியக் குளங்களைப் புனரமைத்தல், பயிர்செய்கைக்கு நிலங்களை உச்சஅளவில் பயன்படுத்துதல். சேதன பசளை பாவனையில் மக்களை ஈடுபடுத்துதல், அசேதனப் பசளைகளை முற்றாக நிறுத்துவது. இயற்கை உணவுகளை உற்பத்தி செய்தல், அதன்மூலம் தொற்றா நோய்களை சமூகத்திலிருந்து அகற்றுதல், இவ்வாறு தூரநோக்கு சிந்தனையுடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் உலக மாற்றத்தில் இடம்பெறுகின்ற விடயங்களுக்கும் நாம் முகம் கொடுத்துள்ளோம். எனினும் மட்டக்களப்பு மாவட்டம் விவசாயப் பொருளாதாரத்தை நம்பியுள்ள மாவட்டமாகும். எனவே அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை மிகவும் அவசியமானதாகும்" என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தெரிவிக்கின்றார்.

"மக்களின் வாழ்வாதாரங்களை கடுமையாக பாதிக்கும் நீர் மற்றும் விவசாய காணிகளுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் கூட்டுறவு கொள்கைகளைக் கொண்டு நிலைத்திருக்கும், வாழ்வாதாரங்களுக்கான அபிவிருத்தியை ஊக்கப்படுத்துகிறது. இப்பகுதி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சிறந்த வழி பெண்களை பொருளாதார ரீதியில் வளப்படுத்திவிடல் வேண்டும். இவ்வாறான திட்டங்களை கூட்டுறவுத்துறையூடாக அதன் கீழுள்ள சங்கங்களை வளப்படுத்தி, அதனூடாக சுயதொழில் வாய்ப்புகளை மேம்படுத்த வேண்டியுள்ளது. அதிலிருந்து சிறந்த விவசாயக் கொள்கைளை முன்னெடுக்கலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம். இவைகளூடாக பால்நிலை சமத்துவம், பயிர்செய்கைக்குப் பயன்படுத்தாமலுள்ள நிலங்களைப் பயன்படுத்துதல் போன்றன அமல்படுத்தப்படும்போது தனி மனிதனும் நாடும் முன்னேற்றமடையும்" என்று வீஎபெக்ட் (We Effect) நிறுவனத்தின் சுவீடனின் பிராந்திய பணிப்பாளரான நீனா லாறியா தெரிவிக்கின்றார்.

எது எவ்வாறு அமைந்தாலும், அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இத்திட்டம் நிறைவு பெற்று, அதனூடாக அப்பகுதிவாழ் மக்கள் விவசாயம், கால்நடை, குடிநீர் உள்ளிட்ட அனைத்து விடயதானங்களிலும் உச்சப் பயன்பாட்டைப் பெறுகின்ற போதுதான் அது நிலைபேறான தன்மைக்கு வழிவகுக்கும். இந்த ஈடேற்றத்தை இப்பகுதி மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.






மீண்டும் கடலுடன் கண்ணீரைக் கரைக்கும் முயற்சி?

# பட்டால்தான் புரியும்

## கற்பிட்டி துறையடி முதல் முகத்துவாரம் வரை; ஆபத்துகள் சூழும் படகுப் பயணம்



ரஸீன் ரஸ்மின்

'வருமுன் அறிந்து காத்துக்கொள்ளும் திறனுடையவர்களுக்கு, அதிர்ச்சி தரக்கூடிய துன்பம் ஏற்படாது' எனப் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஏதாவது ஆபத்துகள் வரும் முன்னரே, அதற்குரிய பாதுகாப்புகளை மேற்கொள்ளும் போது, யாருக்கும் எந்தக் கஷ்டங்களும் வராது என்பதே இதன் அர்த்தமாகும்.

'பட்டால்தான் புரியும்' என்றும் பேச்சு வழக்கில் கூறுவார்கள். அதாவது, "இது பிழை" என ஒரு விடயம் பற்றி சுட்டிக்காட்டும் போது, அதை ஒரு பொருட்டாகவே கணக்கில் எடுக்காமல், "ஒன்றும் நடக்காது; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று கூறுபவர்களைப் பார்த்திருக்கிறோம். இவர்களைப் பார்த்துதான், "பட்டால்தான் புரியும்" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் போலும்!

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட துறையடி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளுக்கு இடையில் போக்குவரத்து மேற்கொள்ளும் படகு சேவை பற்றி, முகத்துவாரம் மக்கள் "இவர்களுக்குப் பட்டால்தான் புரியும்" என்று, ஆதங்கப்படுகிறார்கள்.

கற்பிட்டி துறையடியிலிருந்து முகத்துவாரத்துக்குப் படகு மூலம் போக்குவரத்து செய்வதற்காக மக்கள் காத்து நின்றனர். கற்பிட்டி பிரதேசம், இலங்கையின் சுற்றுலாத்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது. இங்கு 14 தீவுகள் காணப்படுகின்றன. கற்பிட்டி நகரிலிருந்து முகத்துவாரத் தீவுக்குப் பயணிப்பதாக இருந்தால், படகு மூலமே பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.

அந்த வகையில், மீன்பிடித் தொழிலையே தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வரும் கற்பிட்டி, முகத்துவாரம் தீவு மக்கள், தமது போக்குவரத்து தேவைக்காக கடல் மார்க்கமாகவே பயணம் செய்து வருகின்றனர்.

மூவினங்களையும் சேர்ந்த, சுமார் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள், தமது அனைத்துத் தேவைகளுக்காவும் கற்பிட்டி நகருக்கே வந்து போகின்றனர். இதனால், முகத்துவாரத்துக்கும் கற்பிட்டி நகருக்கும் இடையே படகு சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கற்பிட்டி பிரதேச சபையால் வருடந்த கேள்வி அனுமதி கோரல் மூலம், படகு சேவை வழங்குநர் தெரிவு செய்யப்படுவார். இவ்வாறு கற்பிட்டி பிரதேச சபையின் அனுமதியைப் பெற்ற தனிநபரே, கற்பிட்டி துறையடியிலிருந்து முகத்துவாரம் வரை, நீண்ட காலமாக இயந்திரப் படகு சேவையை நடத்தி வருகின்றார்.

பாடசாலை மாணவர்கள், அத்தியாவசிப் பொருட்களை கொள்வனவு செய்யும் பொதுமக்கள், மருத்துவ தேவைக்காக செல்வோர் என நாளாந்தம் அதிகமான மக்கள், சேவையில் ஈடுபட்டு வரும் இந்த இயந்திரப் படகு மூலமே பயணங்களை மேற்கொள்கின்றனர்.

சுமார் 500 மீற்றர் வரை சிறு கடல் மார்க்கமாக பயணங்களை மேற்கொண்டு வரும் முகத்துவாரம் மக்கள், உரிய பாதுகாப்பு அங்கி இன்மை, பாதுகாப்பான இறங்குதுறை இல்லாமை என்பனவற்றால் பெரும் அச்சத்துக்கு மத்தியில் குறித்த இயந்திரப் படகில் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

"ஒன்றும் நடக்காது" என்று வார்த்தையில் மிகவும் இலகுவாக சொல்லிவிட முடியும். ஆனால், இதன் பாரதூரத்தை யாரும் உணர்ந்துகொள்ளவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

ஒரு சொற்ப நேரப் பயணமாக இருந்தாலும், சிறு கடலினது ஆழம் மிகவும் பயங்கரமானதாகும். அது மாத்திரமின்றி, கற்பிட்டி துறையடியில் இயந்திர படகில் இருந்து பயணிகள் இறங்குவதற்காக பயன்படுத்தப்படும் இறங்குதுறையானது ஒரு பகுதி வெளியேயும் மற்றைய பகுதி சிறு கடல் நீருக்குள்ளேயும் கிடப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

> "புத்தளம் மாவட்டத்தில் பாதுகாப்பு இன்றி படகில் பயணம் செய்வதும், ஆபத்தான நிலையில் காணப்படும் தற்காலிக இறங்குதுறை மூலம் பயணம் செய்வதும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை

கற்பிட்டி , துறையடியிலிருந்து முகத்துவாரம் செல்லும் மக்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் என அனைவரும் படகில் ஏறுவதற்காக பயன்படுத்தப்படும் இறங்குதுறையானது பைபர் மூலம் தயாரிக்கப்பட்டதாகும்.

இந்த இறங்குதுறை, தற்பொழுது உடைந்த நிலையில் காணப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். பல வருடங்கள் பழைமை வாய்ந்த குறித்த இறங்குதுறை, இவ்வாறு பழுதடைந்தமையால் இயந்திர படகு சேவை ஊடாக போக்குவரத்து செய்வதற்காக வரும் மக்கள், விபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும், அது பற்றி கணக்கிலேயே எடுக்கப்படாது இன்னமும் கிடப்பிலே காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு சுற்றுலா திட்டத்தின் கீழ் கற்பிட்டி பிரதேசத்தில் அப்போதைய ஜனாதிபதியாகவும், தற்போதைய பிரதமராகவும் இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தால், பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதே, இந்தத் துறையடி இறங்குதுறை பாலமும் முகத்துவாரம் மக்களின் போக்குவரத்துக்காக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து குறித்த பைபர் மூலமான இறங்குதுறை மாத்திரமே பாவனைக்கு உள்ளதாகவும், இது பல தடவைகள் பழுதடைந்த போதிலும் மீளவும் திருத்தப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், தற்போது குறித்த பைபர் மூலமான இறங்குதுறை முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும், இதனை திருத்தி மீளவும் பயன்பாட்டுக்கு விடாது, இந்த மக்களின் படகு சேவை போக்குவரத்துக்காக நிரந்தர இறங்குதுறை ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறும் முகத்துவாரம் மக்கள், பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, பழுதடைந்த நிலையில் காட்சியளிக்கும் படகு சேவை இறங்குதுறையை புனரமைக்க வேண்டிய பொறுப்பு, கற்பிட்டி பிரதேச சபைக்கு உள்ளது என குறித்த படகு சேவையை நடத்தி வரும் முகத்துவாரம் தீவுப் பகுதியைச் சேர்ந்த ஐ.எம்.ரபீக் கூறுகிறார்.

கடந்த காலங்களில் குறித்த இறங்குதுறையில் ஏற்பட்ட வெடிப்புகளைத் தனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்து அதைத் திருத்தியுள்ளதாகவும் அவர் சொன்னார். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, குறித்த படகு சேவையை நஷ்டத்திலேயே முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் கூறினார். கற்பிட்டியில் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையிலும், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மருத்துவ தேவைக்காக கற்பிட்டி, புத்தளம் போன்ற பகுதிகளுக்கு செல்லும் நோயாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, இந்தப் படகு சேவையை முன்னெடுத்து வருவதாகவும் ஐ.எம். ரபீக் தெரிவித்தார்.


"கடந்த வருடம் நவம்பர் மாதம் 23 ஆம் திகதியை எவரும் மறக்க மாட்டார்கள் என நினைக்கிறேன். திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறிஞ்சாங்கேணி களப்பில் பயணித்த படகு கவிழ்ந்ததில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் முழு நாட்டிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இது போன்றதொரு மற்றுமொரு துயரகரமான சம்பவம் வேறு எங்கும் நடந்திட கூடாது என, நாட்டு மக்கள் பிரார்த்தனை செய்து வந்ததையும் நாங்கள் பார்த்தோம்" என்றார்.

இவ்வாறு இருக்க, புத்தளம் மாவட்டத்தில் பாதுகாப்பு இன்றி படகில் பயணம் செய்வதும், ஆபத்தான நிலையில் காணப்படும் தற்காலிக இறங்குதுறை மூலம் பயணம் செய்வதும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எனவே, இந்த விடயத்தில் கேள்வி மனு மூலம் படகு சேவையை குத்தகைக்கு விட்டுள்ள கற்பிட்டி பிரதேச சபை, இதற்கான உரிய தீர்வை நிச்சயமாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

அத்துடன், கற்பிட்டி பிரதேச செயலகம், பாதுகாப்பு தரப்பினர் ஆகியோரும் பிரதேச சபையோடு இணைந்து கற்பிட்டிக்கும் - முகத்துவாரத்திற்கும் இடையில் பாதுகாப்பான படகு சேவையை முன்னெடுக்கவும், நிரந்தரமான இறங்குதுறையை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு கூட்டுக் கடமையாகும். இந்த விடயம் தொடர்பில் கற்பிட்டி பிரதேச சபை தவிசாளரை தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.


பைபர் மூலம் தயாரிக்கப்பட்ட இறங்குதுறை



# வன்னேரியின் ஏக்கம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

"வன்னேரிக்குளம், உரிய முறையில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்; எமது பயிர்களைப் பாதுகாப்பதற்கு, யானை வேலிகளை அமைத்துத் தரவேண்டும்; அத்தோடு அங்கே தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோத மணல் அகழ்வு நிறுத்தப்பட வேண்டும்" போன்ற கோரிக்கைகள் வன்னேரிக்குளம் விவசாயிகளாலும் பொதுமக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்தம் காரணமாக, அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட பிரதேசமாகக் காணப்படும் வன்னேரிக்குளம் கிராமம், இன்றும் பல்வேறுபட்ட தேவைகள் நிறைவு செய்யப்படாத ஒரு கிராமமாக காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக வன்னேரிக்குளம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில், வன்னேரிக்குளம் கிராமத்தில் வாழும் மக்கள், அன்றாடம் பெரும் கஸ்டங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக, நெற்செய்கை காணப்படுகின்ற போதும், காட்டு யானைகளின் தொல்லை, உவர் நிலப்பரம்பல் என்பன வாழ்வாதாரமான விவசாயத்தைப் பெரிதும் பாதிப்பதாகவும் இவற்றுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ், பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வன்னேரிக் குளமானது, ஏ-9 வீதியின் முறிகண்டியில் இருந்து பூநகரி மன்னார் (ஏ-32) வீதியை இணைக்கின்ற வீதியில், முறிகண்டியில் இருந்து 12 மைல் தொலைவில் காணப்படும், ஐயன்கன் ஆறு என்ற சிறிய ஆற்றையும் மண்டகல்லாற்றையும் கொண்ட இரண்டு ஆறுகளின் அணைகளை கொண்டு காணப்படுவதாக விளங்குகின்றது.

1950ஆம் ஆண்டு புனரமைப்பு செய்யப்பட்ட வன்னேரிக்குளம், 1,713 ஏக்கர் அடி நீரைக் கொள்ளக்கூடியதுடன் ஐந்து சதுரமைல் நீரேந்து பிரதேசத்தையும் கொண்டமைந்துள்ளது.



இந்தக்குளம் புனரமைக்கப்பட்டதை அடுத்து, 1954ஆம் ஆண்டு, குடியேற்றத் திட்டத்தின் கீழ், மூன்று ஏக்கர் நெற்செய்கைக்கான காணிகளும் மூன்று ஏக்கர் மேட்டுக்காணிகளும் என்ற அடிப்படையில் 119 பேருக்கு 357 ஏக்கர் காணிகளும் 112 மேட்டுநில உரிமையாளர்களுக்கு 336 ஏக்கர் காணிகளும் வழங்கப்பட்டு, அப்போது வன்னேரிக்குளம் கிராமம் உருவாக்கப்பட்டது என கிராம மக்கள் மூலமாக அறியமுடிந்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில், பருவகாலத்தில் அரிய வகை வெளிநாட்டுப் பறவைகளின் வருகை காணப்படுவதுடன் இயற்கை வனப்பகுதியாகவும் அமைந்துள்ளது, இதனால், இயற்கையாகவே அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய ஒரு பிரதேசமாகவும் அமைந்துள்ளதுடன், சுற்றுலா பயணிகளின் வருகையும் காணப்படுகின்றது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளத்தின் கீழ், 346 ஏக்கர் நிலப்பரப்பில் 115 விவசாயிகள் நெற்செய்கையைப் போகபயிர் செய்கையாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு ஆதாரமாக அமைந்துள்ள குளத்தை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுகளைத் தடுக்க வேண்டிய தரப்பினர், அதனைக் கண்டும்காணமாமல் தடுக்காதிருக்கின்றனர் என்றும் சிலவேளைகளில் அதற்கு அவர்கள் துணைநிற்பதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறு குளத்தைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகள் தடுக்கப்பட வேண்டும் என்பது விவசாயிகளின் பிரதான கோரிக்கையாக உள்ளபோதும் குளத்தின் அணைக்கட்டின் சேதமடைந்த பகுதிகள் புனரமைப்பு செய்யவேண்டும் என்றும் அத்துடன் குளத்தின் நீரேந்து பகுதியில் வளரும் நீர்த்தாவரங்கள் அகற்றப்பட்டு



குளத்தின் உட்பகுதி ஆழப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் வன்னேரிக்குளத்தை சூழவுள்ள பகுதிகளில் காணப்பட்ட உவர் நீர்த்தடுப்பணைகள் சேதமடைந்த நிலையில், உவர் ஆக்கிரமிப்பு அதிகரித்து செல்வதாகவும் உவர் நீர் தடுப்பணைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள இந்த வன்னேரிக்குளம் தவிர்ந்த இதனை அண்டி, திக்காய்குளம், குஞ்சுக்குளம் போன்ற சிறு குளங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு, வன்னேரிக்குளம் மற்றும் அதனை அண்டிக் காணப்படுகின்ற சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் உள்ளடங்கலாக ஏறத்தாள 1,500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதன் காரணமாகப் பயிர்ளைப் பாதுகாப்பதற்கு யானைகளுடன் போராட வேண்டியுள்ளதாகவும் வன்னேரிக்குளம் பகுதியை சூழவுள்ள வனப்பகுதிகளுக்கு யானை வேலிகளை அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் காணப்படும் பாரிய நீர்ப்பாசனக் குளமான வன்னேரிக்குளத்தின் அபிவிருத்திகளை முன்னெடுத்தாலும், சட்டவிரோத மணல் அகழ்வு தடுக்கப்படவில்லை எனில், அதனால் எந்த பயனையும் விவசாயிகள் அனுபவிக்க முடியாது என்றும் உரிய அதிகாரிகள், சட்டத்தை நிலை நாட்டுபவர்கள் மண்ணகழ்வைத் தடுக்க விசேட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரியுள்ளனர்.

# நாட்டின் அறிவு சார்ந்த பொருளாதாரமும் வெளிநாட்டு இருப்புகளும்

‘வரிசை’ என்ற வார்த்தை தற்காலத்தில் பொதுமக்கள் மத்தியில் பொதுவாக ஒலிக்கும் வார்த்தையாகும். அத்தியாவசியப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்களாக மாறியதன் பாதிப்புக்கு அனைவரும் ஆளாகி இருக்கிறார்கள்.

தற்போதைய பொருளாதார மந்தநிலை, 2019 ஆம் ஆண்டில் எதிர்பார்த்தது எனவும், அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தக்கவைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது என்றும் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையின் மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணய இருப்பு, 79 சதவீதம் திடீரெனக் குறைவடைந்தது. அதேநேரத்தில் பிறநாடுகளால் கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்களது வெளிநாட்டு நாணய இருப்புகளை அதிகரிக்க முடிந்தது. பங்களாதேஷ் தனது வெளிநாட்டு ஒதுக்கத்தை இந்தியாவை முந்திக் கொண்டு, 41 சதவீத உயர்வைக் காட்டியது.

இலங்கை அதன் அந்நிய செலாவணியை முக்கியமாகப் பொருட்களின் ஏற்றுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், பயிற்றப்படாத தொழிலாளர்களின் ஏற்றுமதி, சுற்றுலா மூலம் பெறுகிறது. நாட்டின் இறக்குமதிகள் எப்போதும் ஏற்றுமதியை விட அதிகமாகவே உள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 % பங்களிப்பு செய்கின்ற நாட்டின் சுற்றுலாத் துறையானது, 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல்களால் 70 சதவீதம் வீழ்ச்சியடைந்ததுடன், கொவிட்-19 பெருந்தொற்றால் மேலும் பாதிக்கப்பட்டது.

இந்தக் கொரோனா வைரஸ் உலகளவில் பல நாடுகளைப் பாதித்ததன் விளைவாகப் பொருளாதாரம் மற்றும் இயல்புநிலைக்கு இடையூறு ஏற்பட்டது. இது இலங்கையின் ஏற்றுமதியைப் பராமரிப்பதிலும், தொழிலாளர் ஏற்றுமதியிலிருந்து வருவாயைப் பெறுவதிலும் இலங்கைக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதற்கிடையில், கோவிட்-19க்கு எதிராகச் சிறந்த தடுப்பூசி வழங்கல் திட்டத்தை நாடு முன்னெடுத்தது.

> **பிறநாடுகளால் கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்களது வெளிநாட்டு நாணய இருப்புகளை அதிகரிக்க முடிந்தது. பங்களாதேஷ் தனது வெளிநாட்டு ஒதுக்கத்தை இந்தியாவை முந்திக் கொண்டு, 41 சதவீத உயர்வைக் காட்டியது**

> **சுகாதார சுற்றுலா, சிகிச்சை பிரயாண மருத்துவம் போன்ற கருத்தியல்கள் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் மிகவும் பிரபலமாகி வருகின்றன. இவற்றின் ஊடாக நமது நாட்டிற்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவை செய்வதற்கான ஒரு முக்கிய மையமாக இலங்கை இருக்கும்**

ஆனால், இறக்குமதியைக் குறைத்து, உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் வரிவிதிப்புக் கொள்கையை ஸ்தாபிப்பதன் மூலம், இலங்கையை தன்னிறைவடையச் செய்வதற்கு, இலங்கை மூலோபாய ரீதியாக முன்னேற்றங்களைத் திட்டமிட வேண்டும்.

உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கோவிட்-19 தொற்றுநோயை நிர்வகிக்கச் சுகாதாரப் பணியாளர்கள் கடினமாக உழைத்தாலும், ஏனைய வகை தொழில் சார்ந்தோர் வீட்டிலிருந்தே வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கருத்தியலின் விளைவாக அவர்களுக்கான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டன. சிலநாடுகளில் சுகாதாரப்பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள், பிரசலுகைகளை வழங்கியதால் ஏற்கெனவே நிலவிய சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது.

எனவே, வெளிநாட்டு நாணயத்தை நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு, திறன் சார்ந்த தொழிலாளர்களை ஏற்றுமதி செய்வது, முக்கியமாகத் தர மருத்துவ அலுவலர்கள் மற்றும் சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் ஏற்றுமதி அவசியம் என்பது வெளிப்படையானது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) 2013ஆம் ஆண்டில் முன்முயற்சியை மேற்கொண்டு அறிவுப் பொருளாதாரத்தில் சுகாதாரத் துறை பங்களிப்பு குறித்த கருத்தியல் முன்மொழிவைச் சமர்ப்பித்தது. திறமையான தொழிலாளர்களை ஏற்றுமதி செய்வதன் முக்கியத்துவத்தைப் புள்ளிவிவரங்களுடன் இந்த முன்மொழிவு தெளிவாக விளக்குகிறது. இது அறிவுசார்ந்த பொருளாதார கருத்தியலை உகந்த அளவுக்கு உயர்த்த, அந்நிய செலாவணியை அதிகரிக்கும் என்ற போதும், துரதிர்ஷ்டவசமாக, அடுத்தடுத்த அரசாங்கங்கள் மேற்படி முன்மொழிவை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டன.

அறிவு அடிப்படையிலான பொருளாதாரம் என்பது, கல்வி மற்றும் அறிவு (மனித மூலதனம்) என்பன எப்படி ஓர் உற்பத்தி சொத்தாக அல்லது வணிகத் தயாரிப்பாக விற்பனை செய்யப்பட்டு, தனிப்பட்ட, வணிக மற்றும் பொருளாதார துறைக்கு இலாபத்தை வழங்குவதற்கு என்பதாகும். அறிவுப் பொருளாதாரமானது பிரதானமாகக் கீழ்வரும் விடயங்களால் வரையறுக்கப்படுகிறது.

1) தொழில் முனைவோர் மற்றும் அறிவைப் பயன்படுத்துவதற்கான ஊக்கத்தொகைகளை வழங்கும் நிறுவன அமைப்பு
2) திறமையான தொழிலாளர்கள் மற்றும் சிறந்த கல்வி முறை என்பவற்றின் கிடைப்பனவு.
3) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கான அணுகல் வசதி.
4) துடிப்பான புத்தாக்க தளம்.


அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனிநபர், நாடு மற்றும் சர்வதேச சமூகத்துக்கு ஏற்படக்கூடிய பல நன்மைகளை அடையாளம் கண்டுள்ளது.

அந்நியப் செலாவணி அதிகரிப்பு மட்டுமின்றி மேலும் பல நன்மைகளையும் அடையாளப்படுத்தியுள்ளது. உள்ளூர் சுகாதாரத் துறையைச் சர்வதேசத் தரத்திற்கு இணையாகப் பராமரிப்பதற்கு வைத்தியர்கள் முகாமைத்துவம் சார்ந்த நெறிமுறைகள் மற்றும் நடைமுறை நுட்பங்கள் தொடர்பான தங்கள் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தவேண்டும். இந்தவாய்ப்பு, வளர்ந்த நாடுகளின் சுகாதாரத்துறையில் பணியாற்றுவதன் மூலம் மனப்பாங்கு மேம்படுத்தல், தொழில்துறை அனுபவ பிரச்சினைகள் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளப் பயனுள்ளதாக இருக்கும்.

உலகளவில் நன்கு அங்கிகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் இலங்கை மருத்துவர்களால் நாட்டின் நற்பெயரும் மற்றும் அதன் சுகாதார கட்டமைப்பும் ஊக்கம் பெறும். இலங்கையில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்வியானது சர்வதேச மருத்துவ பாடத்திட்டங்களுடனும் ஆங்கிலத்திலும் நடத்தப்படுகிறது. ஆயினும்கூட, சிறந்த முன்னேற்றத்துக்கான எதிர்பார்ப்புகள் உள்ளன. வெளிநாட்டுச் சுகாதார மையங்களுடன் பகிர்ந்து கொள்ளும் அனுபவமும் ஒத்துழைப்பும் எமது பயிற்சித் திட்டங்களை மேம்படுத்த உதவுவனவாக அமையும்.

சுகாதார சுற்றுலா, சிகிச்சை பிரயாண மருத்துவம் போன்ற கருத்தியல்கள் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் மிகவும் பிரபலமாகி வருகின்றன. இவற்றின் ஊடாக நமது நாட்டிற்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்குச் சேவை செய்வதற்கான ஒரு முக்கிய மையமாக இலங்கை இருக்கும். அதற்குக் கொள்கை அடிப்படையிலான கருத்தியல், தேவையான அரசியல் அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். எனவே இத்திட்டத்தின் மூலம் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற வைத்திய அதிகாரிகள் இலங்கையில் இத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்ய முடியும். அறிவுசார் பொருளாதாரக் கருத்தியலானது, நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார மந்தநிலையைச் சமாளிக்கும் ஒரு முறையாகும். இது நமது தாய் நிலத்திற்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



# ‘உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது’

## நாளை ஞாயிற்றுக்கிழமை சுவாமியின் 130ஆவது பிறந்ததினம்



விபுலமாமணி வி.ரி சகாதேவராஜா
சுவாமி விபுலாநந்த பணிமன்ற முன்னாள் தலைவர்





விபுலானந்த அடிகளார், வடக்கையும் கிழக்கையும் இணைத்து நிற்கின்ற பண்பாட்டுப் பாலமாகும். அதுமட்டுமல்ல, தமிழகத்து பண்பாட்டு உறவுகளையும் சீரிய முறையில் பேணுவதை வலுப்படுத்தியவர்.

### பிறப்பின் பின்புலம்

விபுலாநந்தர், 1892ஆம் ஆண்டு மார்ச் 27 திகதி (கரவருடம் பங்குனித் திங்கள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூட்டாதி நட்சத்திரத்தில்) மட்டுமாநகரை அடுத்து 27மைல் தொலைவிலுள்ள காரைதீவு எனும் பழந்தமிழ்க் கிராமத்தில் பிறந்தார். பிறந்ததும் அவருக்கு இயற்பெயராக தம்பிப்பிள்ளை என்ற நாமத்தை சூட்டினர்.

காரைதீவின் காத்தல் தெய்வமாம் பத்தினித்தெய்வம் கண்ணகியைக் குலதெய்வமாகவும் அவ்வம்மையின் நாமத்தைத் தாங்கியவருமாகிய கண்ணம்மையின் வயிற்றில் முதலாவதாக உதித்தவர் அடிகளார் ஆவார். தந்தையார் சாமித்தம்பி. இன்றும் கண்ணகை அம்மனாலயத்தைப் பரிபாலித்து வருகின்ற விஜயராஜன் குடியார் என்று சொல்லப்படுகின்ற வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் அக்காலத்தின் விதானையாக (பொலியானை - அக்கால பொலிஸ் தலைமைக்காரர்) இருந்தார்.

அடிகளார் பிறந்து ஓரிரு நாள்களில் பெற்றோர் அவருக்கு ஜாதகம் பார்ப்பதற்கு ஊரிலுள்ள ஜோசியரிடம் சென்றபோது, “குழந்தைக்கு ஜாதகம் பார்க்க முடியாது. அவருக்கு கண்டம் உள்ளது. ஒரு மாதத்துக்குப் பின்னர் வாருங்கள்” என்று அனுப்பிவிட்டார்.

பெற்றோருக்கோ பெரும் கவலை. இப்படி ஜோசியர் சொல்லிவிட்டாரே என வேதனைப்பட்டுக் கொண்டிருந்தவேளை அவர் திடீரென நோய்வாய்ப்பட்டார். அனல் போல் கனத்தது தேகம்; என்ன வியாதி என்று தெரியாமல்போகவே, குழந்தையைத் தூக்கிக்கொண்டு மாட்டுவண்டிலில் கதிர்காமத்துக்குச் சென்றனர்.

கதிர்காமத்து முருகன் சந்நிதானத்தில் குழந்தையைக் கிடத்தி பலிப்படுத்தார்கள். “எமது பிள்ளையை காப்பாற்றித்தர வேண்டும்; இன்றேல் நாமும் இங்கே விரதமிருந்து மரணிப்போம்” என்று நேர்த்தி வைத்தார்கள்.

ஒருமாதகாலம் வரை அங்கேயே தங்கியிருந்தார்கள். அத்தருணம் அந்த அதிசயம் நிகழ்ந்தது. குழந்தை படிப்படியாக வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. குழந்தை முழுமையாக நோய் குணமாகவே, நேர்த்தியை ஏற்று, தீர்த்துவைத்த முருகப் பெருமானின் பெயரான மயில்வாகனன் எனும் பெயரை அவருக்குப் பெற்றோர் சூட்டினர். அன்றிலிருந்து தம்பிப்பிள்ளை எனும் நாமம் மயில்வாகனன் ஆக மாறிற்று.

வீட்டுக்கு வந்ததும் நல்லநாள் பார்த்து, மீண்டும் ஜோசியரிடம் சென்று ஜாதகம் எழுதக் கேட்டபோது ஜோசியரும் எழுதிக்கொடுத்தார்.

அதன்பின்பு விதானையாரான சாமித்தம்பி மே மாதம் 03ஆம் திகதி, குழந்தைக்கு பதிவு வைத்தார். அந்தத் தினத்திலிருந்தே பிறப்பத்தாட்சிப் பத்திரம் கிடைத்தது. அதாவது சுவாமிக்கு இன்று இருக்கக்கூடிய பிறப்பத்தாட்சிப் பத்திரம் 03.05.1892 என்பதாகும். இது தமிழுக்கு நந்தன வருடத்தில் 22ஆம் திகதியாகக் கருதப்படும்.

கிராமத்துச் சூழல், பெற்றோரின் பக்தி என்பவற்றால் சிறுவயது முதல் அடிகளார் கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவ்வாலயத்தின் தலவிருட்சமான வேம்பு மரத்தின் கீழிருந்து தியானிப்பதையும் பழக்கமாக்கிக் கொண்டார். பல்லாண்டு கால வேம்பமரம் இன்றும் உள்ளது. அவ் விருட்சத்தின் கீழிருந்து சுவாமி ஞான அருள் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது.

இதன் காரணமாக பிற்காலத்தில் ‘அம்பாள் சரிதம் கூறும் சிலப்பதிகாரம்’ பற்றி அவர் ஆராயத் தொடங்கினார்.

### கல்வி

பிள்ளைப் பருவத்தில் ஏடு தொடங்கிய சூழல் கிராமத்தில் குருகுலக்கல்வி முறைமை அமைந்திருந்தது. கிராமத்தின் மற்றுமொரு பழம்பெரும் ஆலயமான பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்த புலோலியூர் வைத்திலிங்க தேசிகர், நல்லரெத்தினம் குஞ்சித்தம்பி உபாத்தியாயர் ஆகியோரிடம் மயில்வாகனன் கல்வியை ஆரம்பித்தார்.

ஆரம்பக் கல்வியை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் கற்றார். கேம்பிரிட்ஜ் சீனியர் சோதனையில் சித்தியடைந்த பின்னர், அவர் புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்து அதன் பின்னர், கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு விரிவுரையாளராயிருந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் பண்டையத் தமிழ் இலக்கியத்தைக் கற்றார்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 1912ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற சான்றிதழுடன் மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1915ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் தொழில்நுட்பக்கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று, 1916இல் அறிவியலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் தோன்றி பண்டிதர் பட்டத்தையும் பெற்றார். இலங்கையிலிருந்து இப்பட்டத்தை முதன்முதல் பெற்றவர் சுவாமி விபுலாநந்தரே.

### ஆசிரியப் பணி

1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெரு விருப்புடன் ஏற்றுக் கொண்டார். அத்துடன் 1920 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பீ.எல்.சி தேர்வில் தோற்றி சித்தியடைந்தார்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி முகாமையாளரும் திருப்புகழ் சிவப்பிரகாசம் சிவஞானசித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலாநந்தர், கல்லூரியின் வளர்ச்சியில் தனது செறிவான கவனத்தைச் செலுத்தும் பொருட்டு 1928இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக ‘யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்’ என்ற கழகத்தை அமைத்து, தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர் பாலபண்டிதர் பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை நாட்டிற்கு அளித்துள்ளது.

### இ.கி.மிசனில் இணைவு

ஆசிரியப் பதவியைத் துறந்து 1922 ஆம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார் மயில்வாகனன். சென்னையில், மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் ‘சுவாமி விபுலாநந்தர்’ என்ற துறவறப்பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர் இலங்கை திரும்பி இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

சிவானந்தா தேசிய பாடசாலைக்கு அடிக்கல் 26.11.1925 அன்று சுவாமி விபுலானந்தரால் நடப்பட்டது. 15.04.1929 அன்று சமய அனுட்டானப்படி சுவாமி விபுலானந்தர் பாடசாலையை ஆரம்பித்தார்.

### இசை ஆராய்ச்சி

கல்வியில் மட்டுமல்லாது சுவாமியின் முக்கிய நூலான ‘யாழ்நூல்’ எழுதப்பட்டதற்கு விஞ்ஞான பட்டதாரியான விபுலானந்தருக்கு இளமையிலிருந்து அவர் வணங்கிய கண்ணகி அம்மையும் கண்ணகியுடன் தொடர்புள்ள சிலப்பதிகாரத்திலுள்ள ஈர்ப்பும் அதையொட்டி ஊரில் நடக்கும் சமய சடங்குகளும் அவர் அடிமனத்தில் பதிந்து கிடந்து உந்துதலைக்கொடுத்தன.

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின்படி, சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில் தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது. புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

1943 ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார்.

சுவாமி அவர்கள் 15 ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழ் நூலினைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம்பூதூர் வில்வாரண்யேசுவரர் கோவிலில் இசை விற்பன்னர்கள், கற்றோர்கள் முன்னிலையில் தேவாரப்பண்களைத், தான் ஆராய்ந்து கண்டுபிடித்த வரைபடத்துடன் விளக்கிய பின்னர், தான் தயாரித்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணைகளை சங்கீதபூஷணம் க.பெ. சிவானந்தம் பிள்ளையால் மீட்டப்பட்டு இன்னிசை பொழிய, பலர் ஆய்வுரை நிகழ்த்த ‘யாழ் நூல்’ அரங்கேற்றப்பட்டது.

உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். கொழும்பில் சிகிச்சை பெறலானார். 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு (19.07.1947) சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார்.

அவரது உடல் அவர் உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. ஈழத்து மக்களுக்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி இலங்கை அரசு, தேசிய வீரர் வரிசையில் இவரைச் சேர்த்துள்ளது.

இத்துடன், நாட்டில் உள்ள பாடசாலைகளிடையே கொண்டாடப்படும் அகில இலங்கை தமிழ் மொழி தினம், இவரது மறைவு தினமான அன்றே கொண்டாடப்படுகின்றது.











# கலைஞர்களுக்கு ஞாபகார்த்தம்

மலையக கலை கலாசார இரத்தின தீப அமைப்பின் ஏற்பாட்டில், மறைந்த தென்னிந்தியப் பாடகி லதா மங்கேஷ்கர், நடிகர் காமினி பொன்சேக, புலவர் அருள் வாக்கி அப்துல் காதர் முதலியோருடைய ஞாபகார்த்த நிகழ்வு கண்டி, கெப்பெட்டிப்பொல மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக களனிப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ உட்பட, பேராசிரியர் துரை மனோகரன், தொழிலதிபர் எஸ். முத்தையா, கலாபூசணம் இரா அ. இராமன், யோகா குருகி ஜெயக்குமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஹேரத் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்பால் அலி





## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான
# பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா

கண்டி, உடுநுவர அபிவிருத்தி நிதிய வளாகத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கான பாடசாலை, 'அந்நூர்' என்ற நாமத்தில் 2018 ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி, பத்து மாணவர்களுடனும் நான்கு ஆசிரியர்களுடனும் தற்காலிக கட்டடத்தில் குறைந்த வசதிகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலை தற்போது 40 மாணவர்களுடனும் பத்து ஆசிரியர்களுடனும் வளவாளர் என். எம். ராஜுதீனைத் தலைவராகக் கொண்ட செயற்குழுவின் வழிகாட்டுதலில் சிறப்பாக இயங்கி வருகின்றது. பாடசாலையின் அதிபராக வைத்திய அதிகாரி பர்ஸானா கௌஸ் பணிபுரிந்து வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடசாலையின் தேவையாக காணப்பட்ட கட்டடத் தொகுதியின் திறப்பு விழா இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுவது பாடசாலையின் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இதில் பாராளுமன்ற உறுப்பினரும் உடுநுவர அபிவிருத்திக் குழுவின் தலைவருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றார்.

இக்கட்டடத் தொகுதியானது நூலகம், கணினி அறை, விளையாட்டுத் திடல், கேட்போர் கூடம், வரவேற்பு மண்டபம், வகுப்பறைகள், உடற்பயிற்சி வசதிகள் உட்பட பல நவீன வசதிகளைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எம்.எம்.எம். ரம்ஸீன்



# கலங்கரை
# நூல் வெளியீடு







காத்தான்குடியில் மௌலவிய்யா ஹாஜரா கலீலுர் றஹ்மான் (சித்தீக்கியா) ஆசிரியை எழுதிய 'கலங்கரை' எனும் நூல் ஞாயிற்றுக்கிழமை (20) வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்நூல் வெளியீட்டு விழா, காத்தான்குடி சித்தீக்கியா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனி தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் காத்தான்குடி சித்தீக்கியா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம். தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர்.

இதன் போது நூல் அறிமுக உரையை கவிமணி மௌலவி எம்.எச்.எம். புகாரி நிகழ்த்தியதுடன் நூல் வெளியீட்டுரையை முன்னாள் அதிபரும், ஓய்வு பெற்ற காதி நீதிபதியுமான எம்.எம். மஹ்றூப் கரீம் நிகழ்த்தினார். நூலின் முதற் பிரதியை காத்தான்குடி சித்தீக்கியா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அப்துல் கபூர் மதனிக்கு நூலாசிரியை வழங்கி வைத்தார். பாதை தவறிய உள்ளங்களுக்கு பரிவுடனான வழிகாட்டல் நூலாக, இந்தக் 'கலங்கரை' எனும் நூல் விளங்குகின்றது.

எம்.எஸ்.எம். நூர்தீன்



# 'எங்கள் உயிர் எங்கள் கைகளில்'








வீதி விபத்துகளைத் தடுப்பதற்காக பயிலுநர் பயிற்சி நூல், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (22) மட்டக்களப்ப மாவட்ட செயலகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி பா. யூடி ரமேஸ் ஜெயகுமாரால் எழுதப்பட்ட 'எங்கள் உயிர் எங்கள் கைகளில்' எனும் தலைப்பிலான பயிலுநர் பயிற்சி நூல், வீதி விபத்துகளையும் அதனால் ஏற்படும் அனர்த்தங்களையும் தவிர்க்கும் நோக்கத்துடனும் வாகனம் செலுத்துபவர்கள், புதிதாக வாகனம் செலுத்துபவர்களுக்கான வழிகாட்டல்கள், வீதி பாதுகாப்பு பொறிமுறைகள் உள்ளடங்கிய பயிற்சி நூலாகவும் அமையப் பெற்றுள்ளது.

இந்நூல் வெளியீட்டின்போது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை, சிரேஷ்ட சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர். பீ. ஜீபரா, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ. சுகுனன், டொக்டர் ஜீ. விவேகானந்தராஜா, மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மா சிங்க ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், சுகாதாரத் துறை வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

எம் எஸ் எம் நூர்தீன்













# விவசாயிகளுக்கு நன்கொடை

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால் விவசாயிகள் பெரிதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். காரணம், பயிர்ச்செய்கைக்கான உரத்தட்டுப்பாடு, விதைகளின் விலை அதிகரிப்பு, மருந்து தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவையாகும். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கிளிநொச்சியில் இயங்கும் புதியவாழ்வு நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கனநாதம் அருள்கட்டளை அமைப்பின் நிரஞ்சனால் நிதி ஊக்குவிப்புத்தொகை வழங்கும் நிகழ்வு, அக்கரப்பத்தனை லோவர் கிராண்ட்லி இன் பாடசாலையில் புதன்கிழமை (23) நடைபெற்றது. அக்கரப்பத்தனையில் 20 விவசாய குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபாய் வீதம் நன்கொடையாக வழங்கப்பட்டது. இந் நன்கொடையை லண்டன் கனநாதம் அருள் கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் நிரஞ்சனின் நெருங்கிய நண்பர் மறைந்த ஜிஷ்வி மரிக்காரின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது. கனநாதம் அருள் கட்டளை அமைப்புக்கு அக்கரப்பத்தனை விவசாயிகள் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

அருண் யுஹேஷ்

# புத்தக அரங்கப் பெருவிழா




தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தலைப்பில் புத்தக அரங்கப் பெருவிழா மார்ச் சனிக்கிழமை (26), ஞாயிற்றுக்கிழமை (27) ஆகிய தினங்களில் இல. 62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் நடைபெறுகின்றது.

இப் பெருவிழாவின் விசேட அம்சமாக, மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 9 மணி தொடக்கம் பி.ப 8 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு 'ஈழத்து இலக்கியங்களை அறிவோம்' என்ற தலைப்பில் புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் ஆய்வாளரும், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளருமான பி. முத்துலிங்கத்தின் தலைமையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் அரங்க விழாவில் 'சவரக்கத்தியும் குரல்வளையும்', 'இருளுறை வாள்' ஆகிய இரண்டு நாடகங்களின் ஆற்றுகைகள் இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் 'இளையோர் பார்வையில் யாழ்ப்பாண இதழ்கள்' என்ற தலைப்பிலான யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் கலை இலக்கிய இதழ்கள் தொடர்பான கலந்துரையாடல் யூனியன் கல்லூரி ஆசிரியர் த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறும்.

குறித்த மூன்று தினங்களும் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கான உறுப்பினர் சேர்ப்பும் இடம்பெறவுள்ளது.



# தேசிய குறும்படப் போட்டியில் மூன்றாமிடம்

கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்திய அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தேசிய ரீதியிலமைந்த ஆக்கத்திறன் போட்டியின் குறும்படப் போட்டியில், ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலம் சார்பில் பங்குபற்றிய ஆசிரியரும் கவிஞருமான ஜே.வஹாப்தீன் மூன்றாமிடத்தைப் பெற்றார். அத்துடன் கவிதை, சிறுகதை ஆகியவற்றுக்கான சிறப்புப் பரிசுகளையும் பிஎம்ஐசிஎச் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பெற்றுக்கொண்டார்.

எஸ். அஷ்ரப்கான்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 26 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.